பக்கங்கள்: பத்து
விலை ரூபா 5-00

Registered as a News paper in Sri Lanka

பொது சன நூலகம்
10 MAR 2001
மாநகராட்சி ம
யாழ்ப்பாண

# வலம்புரி
VALAMPURI

மங்கையரின் அழகுக்கு
மேலும் அழகூட்டும்
தங்க நகைகளை 22கரட்டில்
பெற்றிட இன்றே நாடுங்கள்.
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1574)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 26 சனிக்கிழமை (10-03-2001) தொலைபேசி: 3378 ஒலி: 81

## ★ நோர்வே அரசு தயாரித்த "புரிந்துணர்வில்" இணக்கமின்றி

# பேச்சுவார்த்தை சாத்தியமில்லை!

### அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

(அரசியல் நிருபர்)

**இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதுடன், இருசாராருக்குமிடையே எப்போது பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் என்று திட்டவட்டமாகக் கூற முடியாதுள்ளதென தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கருத்துத் தெரிவித்துள்ளார்.**

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானத்தைஏற்படுத்தும் வரையான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் ஒஸ்லோவிலும், நெதர்லாந்திலும் ஆரம்பிக்கப் படவுள்ளதாக செய்தி ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநயக்கா குமாரதுங்கா இன்னமும் இரண்டு மாதகாலத்துக்குள் பேச்சுவார்த்தைகள் ஆரம்

→10ஆம் பக்கம் பார்க்க

## மலையக தொழிலாளர்களின் சத்தியாக்கிரகத்தில் புளொட்டும் இணைவு

(வவுனியா)

400 ரூபா சம்பளஉயர்வு கோரி அட்டனில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் தோட்டத்தொழிலாளர்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து புளொட் அமைப்பினர் இன்று சத்தியக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்

முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான த. சித்தார்த்தன், முன்னாள் எம் பி பாலச்சந்திரன் உட்பட 50 பேர் கொண்ட குழு நேற்று வவு

→10ஆம் பக்கம் பார்க்க

## 18 வருடங்களாக பலதுன்பங்களை வட பகுதிமக்கள் அனுபவிக்கின்றனர்

### பொன்விழாவில் ஜனாதிபதி உரை

[கொழும்பு]

கடந்த பதினெட்டு வருடங்களாக வடபகுதி மக்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள் அவர்களைஅத்துயர துன்பங்களிலிருந்து விடுவிப்பதுதான் அரசின் கொள்கையாகும்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இலங்கை விமானப்படையின் பொன்விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது விமானப்படைக்கு தற்போது நவீன ஆயுத தளபாடங்கள் வழங்கியுளளோம். அவர்கள் இராணுவத்துடன் இணைந்து விடுதலைப் புலிகளுக்கெதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு வெற்றிகள் கண்டு

→10ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் மீதான பிரிட்டனின் தடை 14ம்,15ம் திகதிகளில் அமுல்

(லண்டன்)

பிரித்தானியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் திட்டம் இம் மாதம் 14ம் 15 ஆம் திகதிகளில் அமுலுக்கு வந்துவிடும் என லண்டன் செய்திகள்தெரிவிக்கின்றன.

பயங்கரவாதச் தடைச் சட்டம் அமுலுக்கு வரும் பட்சத்தில், தமிழீழவிடுதலைப் புலிகள் உட்பட 21 அமைப்புகள் தடைசெய்யப்பட்டுவிடும்.

இந் நிலையில்நோர்வேயின் விசேட தூதுவர்எரிக் சோல்ஹெய்மின் சமாதானம் பேசுவது என்பதுசாத்தியாமாவது சந்தேகமேயென லண்டன் இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. (வ)

## வருமானம் கருதி சூதாட்டத்திற்கு அனுமதி

(கொழும்பு)

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், போர்ச் செலவீனத்தை ஈடு செய்வதற்காக சூதாட்டக் கழகங்கள் இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

போர்ச்செலவீனத்தை ஈடு செய்ய இதன் மூலம் 500 மில்லியன் ரூபாவைவருமானமாகத் திரட்ட முடியும் என்பதனால் இவ்வனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இதுவரை காலமும் அரசு மாத்திரம் நடாத்தி வந்த அதிர்ஷ்ட

→ 10ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் பிரதிநிதி மாணிக்கசோதியை நானே அழைத்துச் சென்றேன்!

### பாராளுமன்றில் உபசபாநாயகர்

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய இராணுவத்துக்கெதிராக 1987ம் ஆண்டு போரிட்ட போது இந்திய இராணுவத் தளபதியொருவர் ''நாங்கள் ஸ்ரீலங்காவின் நன்மைக்காகப் போராடுகின்றோம் நீங்களோ புலிகளுக்கு இரகசிய உதவிகள் செய்கிறீர்கள்'' என்று என்னிடம் தெரிவித்தாரென பிரதிச் சபாநாயகர் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்ட விவா

→10ஆம் பக்சம் பார்க்க

## ★ யாழ்-மாநகரசபையின் தற்காலிக குடும்பநல சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவதில் இழுத்தடிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதாரப் பகுதியில் கடமையாற்றும் தற்காலிக குடும்பநல சேவையாளர்களுக்கு ஏன் சம்பளம் வழங்கப்பட வேண்டுமெனக்கோரி யாழ்மாநகரசபையின்ஆணையாளரினால் சுகாதார வைத்திய அதிகாரிக்குக் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மாநகரசபையின் நிர்வாக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த எட்டுவருடங்களாக சுகாதாரப்பகுதியில் சேவை ஆற்றும் தற்காலிக குடும்பநல சேவையாளர்களின் சம்பளப் பட்டியல் தயாரிக்கப்பட்டு சுகாதாரப் பிரிவினால் அனுப்பிவைக்கப்பட்டபோது அதற்கான சம்பளமெதுவும் வழங்கப்படாது குறிப்பிட்ட ஊழியர்கள் என்னவேலை செய்தார்கள், அவர்களின் வயதென்ன, தரமென்ன போன்ற பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டு ஆணையாளரினால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாம்.

இதேவேளை பொது சுகாதாரப்பரிசோதகர் பயிற்சியில்சித்தியடைந்த ஒரு சிலருக்கு உள்ளக இடமாற்றம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கடந்த இருவாரங்களுக்கு முன்சுகாதாரப்பகுதிஊழியர்

→10ஆம் பக்கம்பார்க்

## மருத்துவபீடம் மூடப்பட்டது!

கொழும்புசுதேச மருத்துவபீடம் நேற்று முன்தினம் முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. பரீட்சைகள் மற்றும் கல்விச் செயற்பாடுகள் விரிவுரைகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும், மாணவர்கள் இன்று நண்பகல் 12 மணிக்கு முன் மருத்துவபீடத்தை விட்டு வெளியேறும்படியும் மருத்துவபீட பணிப்பாளர் நாணயக்கார பணித்துள்ளார்

(இ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


### தேவை

புதிய அல்லது பாவித்தமிரு தங்கக் கொட்டுகள் இருப்பின் நல்ல விலையில் பெற்றுக் கொள்ளப்படும். வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம். கோவிந்தபிள்ளை விஜய குமார் 192/1, நாவலர் வீதி, (பெருமாள்கோயிலடி) யாழ்ப்பாணம். (2608)

### தவறிவிட்டது

கோண்டாவில் நவரட்ண ராஜா வீதியில் வசிக்கும் வாமதேவன் சுஜித்தா என்பவருடைய தெல்லிப்பழை கிழக்கு விலாசத்துடன் தே. அ அட்டை இல 817662528V மற்றும் விசேட அடையாள அட்டை பாடசாலை அடையாளஅட்டைஎன்பன நல்லூர் பலநோக்கு கூ. சங்கத்திற்கும் கோண்டாவில் ஆசிமட விநாயகர்ஆலயத்திற்கும் இடையில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நல்லூர்ப.நோ.கூ. சங்க கிளையில் அல்லது வங்கியில்ஒப்படைக்கவும். கி/1587


# சீநோர் தொழிற்சாலையை மே மாதத்திற்கு முன் இயக்கமுடிவு

## சந்திப்பின்போது அமைச்சர் டக்ளஸ் இணக்கம்

(ஈச்சமோட்டை)

வட பகுதியில் இயங்கி வந்த சீ நோர் தொழிற்சாலையை எதிர்வரும் மே மாதத்திற்கு முன் இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நடைபெற்ற சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது.

மேற்படிசந்திப் புதொழிற்சாலையின் அபிவிருத்திச் சபைத் தலைவர் அன்ரசன் தலைமையிலான குழுவினருக்கும் அமைச்சருக்கும் இடையில் அவரது வாசஸ் தலத்தில்அண்மையில் இடம் பெற்றது.

அச்சந்திப்பின் போது முன் வைக்கப்பட்ட ஏனைய விடயங்களாவன;

★ சீ-நோர்என உள்ளபெயரைமாற்றிவடகடல் தொழிற்சாலை எனபெயர் சூட்டுவது.

★ இதற்கு பொது முகாமையாளராக குகதாசனை நியமிப்பது.

★ தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய நஷ்டஈட்டைஒருவருடத்திற்குள் வழங்குவது.

★ இரண்டு தொழிலாளர்களை தொழில் இயக்குநர்களாக நியமிப்பது.

★ பழைய தொழிலாளர்களுக்கு இதில் முன்னுரிமை அளிப்பது.

போன்ற விடயங்கள் ஆராயப்பட்டு அமைச்சரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (க-59)

## திருத்தப்படாத வீதிகள்

(ஈச்சமோட்டை)

யாழ் நகர்ப் பகுதியை அண்டிய பல வீதிகள் பலத்த சேதமுற்ற நிலையில் திருத்தம் செய்யப்படாது காணப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது;

டேவிட்வீதி, சென்ஜேம்ஸ் வீதி, ஈச்சமோட்டை, மாட்டீன் வீதி, மத்தியூஸ் வீதி போன்ற வீதிகளே கவனிப்பாரற்று காணப்படுகின்றன.

இவ்வாறுசேதமடைந்துள்ள வீதிகளினால் போக்குவரத்தில் இடையூறுகள் எற்பட்டு மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது. (க-59)

## வள்ளுவனைப் போற்றி வாழ்வோம்!



வாழும் வழியதனை வகுததுலகு உயர்ந்திடவே
வழங்கிய வள்ளுவனை வணங்கி எமக்கிங்கு
சூழும் இடர்நீங்கிச் சிறப்புடனே வாழ்வதுவும்
செம்மையுற விழங்கிடவே அகில பொது மறையை
ஆழக் கருத்தூன்றி உணர்ந்து அவன்காட்டும்
அருமைமிகு நெறியதனில் நடந்து மிக நிறைவுடனே
நாளும் நலமோங்க நானிலம் திகழ்ந்திடவே
நந்தமிழ்ப் புலவனைப் போற்றுதல் செய்வோமே

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

(இன்று திருவள்ளுவர் குருபூசையை ஒட்டி இக்கவிதை பிரசுரமாகிறது)

# தென்மராட்சியில் வீடுகளைபார்வையிடுவதற்கு இலகு வழிமுறைகள் அமுல்

(கல்வயல்)

தென்மராட்சிப் பகுதியிலிருந்து கடந்த வருட மேமாதத்தில் யுத்தசூழ்நிலையால் இடம் பெயர்ந்து வடமராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் தென்மராட்சியிலுள்ள தமது சொந்த வீடுகளைச் சென்று பார்வையிட செல்வதற்கான நடைமுறைகள் இலகுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமத்திலுள்ள 522 வது பிரிகேட் படைஅதிகாரிக்கு கிராம சேவை உத்தியோகத்தர், பிரதேசசெயலர் ஊடாக அவர்களின் பொர்சுகளுடன் உரியவிண்ணப்பத்தைச் சமர்ப்பித்து அனுமதி பெற்று மோட்டார் சைக்கிளில் சென்று வீடுகளைப்பார்வையிட முடியும். மீசாலைப் பகுதிக்கு துவிச்சக்கர வண்டிகளில் செல்லவும் அனுமதிக்கப் படுகின்றனர்;

பொருட்களை மீட்டு வருவதற்கு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலிருந்தும் ஒன்றுவிட்ட ஒரு நாளைக்கு தலா20 பேர்வீதம் கிராம சேவை அலுவலர்களால் அழைத்துச் செல்லப்பட்டு உடமைகள் மீட்க அனுமதிக்கப்படுகிறது. தினமும் காலை 8.30 மணிக்கு இப்பணிகள் ஆரம்பிக்கின்றன. (க-111)

# இராசி பலன்

10.03.2001

[மாசி 26 சனி]

பிரதமை மு இ 9 40 வரை
உத்தரம் பி.இ 12.31 வரை
இராகு காலம்:- 9 24-10.54

சுப நேரம்:- 3.24-4.54

**மேடம்**
முயற்சி கைகூடும், சத்துரு ஜெயம், தொழிற்சிறப்பு, தன வரவு.

**இடபம்**
தாழ்வு நிலை. குடும்பக் கவலை, காரிய தாமதம், மனச் சஞ்சலம்.

**மிதுனம்**
கல்விச் சிறப்பு, முயற்சி மந்தம், தன்னம்பிக்கைக்குறைவு, பயந்த சுபாவம்.

**கடகம்**
பிரயாணம், தனவரவு, காரிய நிறைவு, வாக்கு மேன்மை.

**சிங்கம்**
வாக்கு கலகம், பொருள் விரயம், முயற்சி தாமதம், அமைதிக்குறைவு.

**கன்னி**
ஆழ்ந்த சிந்தனை, சயன சுகம், ஜனவசியம், விருந்துபசாரம்.

**துலாம்**
தனவிரயம், மனக்குழப்பம், பிரயாணம், காரிய தாமதம்

**விருச்சிகம்**
நண்பர்கள்சந்திப்பு, கௌரவம், தனலாபம், முயற்சி கைகூடும்;

**தனுசு**
தொழில் மேன்மை, அதிகாரம், சுப நிகழ்ச்சி, நல்ல செய்தி.

**மகரம்**
பிரயாணம், கட்டுப்பாடு, வயிற்றுக் கோளாறு. உடல் உழைப்பு

**கும்பம்**
உஸ்ன நிலை, பிரயாண பயம், தேவையற்ற பிரச்சினை, முயற்சி தடங்கல்.

**மீனம்**
போசன சுகம், காரியம் கைகூடும், வாகன வசதி, தன வரவு;

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது;)

வளவன்

# மாதகல்விக்னேஸ்வராவில் நடமாடும் சேவை

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவை, எதிர்வரும்12 ந்திகதி திங்கட்கிழமை காலை 9மணி தொடக்கம்மாதகல்விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் பிரதேச செயலர் நா வேதநாயகன் தலைமையில் இடம் பெறும்.

மாதகல் கிழக்கு, மாதகல் தெற்கு, மாதகல் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இச் சேவையில் மக்களின் பல தரப்பட்ட பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்படும் (க-120)

# சாரதி அனுமதிப்பத்திரம் பெறுபவர்கள் 14ற்கு முன் விண்ணப்பிக்கவும்

(சங்கானை)

மோட்டார் வாசனம் செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம் பெறுபவர்களை எதிர்வரும் 14ம் திகதி புதன் கிழமைக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மோட்டார் வாகனங்களுக்கான புதிய இலக்கங்கள் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்படமையால் புதிய பதிவுகள் எதிர்வரும் 26ஆம் திகதிக்குப் பின்னரே நடைபெறும் எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (செ-123)

# நீதிமன்றப் பதிவாளர் சங்க வருடாந்த மாநாடு

(வடமராட்சிகிழக்கு)

இலங்கையிலுள்ள சகல நீதிமன்றங்களினதும் பதிவாளர்கள் சங்கத்தின் வருடாந்த மகாநாடு கொழும்புகல்கிசை நீதிமன்றத்திற்கு அண்மையிலுள்ள "கல்கிசை மவுண்ட் லங்கா ஹோட்டலில்" இன்று சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற உள்ளது.

பிரதம நீதியரசர் சரத்நந்த சில்வா இதில் கலந்து சிறப்பிக்க உள்ளார்.

இந்த மகாநாட்டிற்கான அழைப்புக் கடிதங்களை சங்கத்தின் கௌரவ செயலாளரும் கொழும்பு மேல்நீதிமன்ற பிரதிப் பதிவாளருமான திருமதி ஐராங்கனி பெரேரா சகல நீதிமன்ற பதிவாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்கள், நீதிவான் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் பதிவாளர்களுக்கும் இவ் அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-43)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(இணுவில்)

புன்னாலைக் கட்டுவன் உ.அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் சி. சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இப் பாட்டிக்கு, வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் வி. பாலசிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ 49)

# வீடு பார்க்கச் சென்றவர் மரணமடைந்தார்

(மந்திகை)

தென்மராட்சி மீசாலைப் பகுதிக்குத் தனது வீட்டைப் பார்வையிடச் சென்றவர் மயக்கமடைந்ததையடுத்து மரணமான சம்பவம் கடந்த 7 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது;

மீசாலை கிழக்கைச் சேர்ந்த குமாரசாமி விநாயகமூர்த்தி (வயது-48) என்பவரே மரணமானவராவார்.

சடலம் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் உரிய முறைப்படி உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது (க-23)


யா.ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி புத்தூர்

தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து (2001)

## விண்ணப்பங்கோரல்

யாழ். கல்வி வலய முறைசாராக்கல்விப் பிரிவினால் நடத்தப் படுகின்ற மேற்படி கற்கை நெறிகளைக் கற்க விரும்புபவர்கள் எமது கல்லூரிக காரியாலயத்தில் தொடர்பு கொண்டு 15. 03. 2001 திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களைக் காரியாலயத்தில் சேர்க்கவும்.

அதிபர்.

(கி/1584)



## நன்றித் துதி

யேசுவின் அதி பரிசுத்த இருதயமானது உலகெங்கனும், இப்போதும் எல்லாக் காலமும் புகழப் படவும் அன்பு செய்யப்படவும், ஆராதிக்கப்படவும், மகிமைப் படுத்தப்படவும் கடவதாக.

யேசுவின் அதி பரிசுத்த இருதயமே எம் மேல் இரக்கமாயிரும்.

கைவிடப் பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதா ததேயுவே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

(இச் செபத்தைத் தினமும் 9 தடவை 9 நாட்களுக்கு சொல்லி வர, கேட்கும் வரம் கிடைக்கப் பெறும் )

ஓர் அடியான்.

[2609]

# யாழ். குடாநாட்டு மக்களுக்கு ஒரு நற்செய்தி!

இலங்கை அரசாங்கத்தினரால் 1979ஆம் ஆண்டு மகாவலி வலய அணைக்கட்டுகளுக்காக சிபாரிசு செய்யப்பட்ட உன்னதம் மிக்க தரத்தின் சின்னம் மகாவலி மெரைன் அத்துடன் இலங்கையில் மிகப்பெரிய கொன்கிறீட்டு நிர்மாணங்களுக்காகப் பயன்படுத்தப் பட்ட சிமெந்து மகாவலி மெரைன்.

இதில் -

★ விக்டோரிய அணைக்கட்டு
★ இலங்கை வங்கி தலைமையகம்
★ மியூயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதி, ஹல்ஸ் டோப்
★ கொழும்பு ஹில்டன் ஹோட்டல்

ஆகிய கட்டட நிர்மாணங்களுக்கு உபயோகிக்கப்பட்ட சிமெந்து 'மகாவலி மெரைன்' தற்பொழுது மொத்தமாகக் கிடைக்குமிடங்கள்:

## பாக்கியரட்ணம் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்

பிரதான வீதி, சங்கானை.
T. P. :- 070 - 212713
021 - 2664

## E. S. பேரம்பலம் & கம்பனி

50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T. P.:- 021 - 2988

மட்டுப்படுத்தப்பட்ட
மகாவலி மெரைன் சிமெந்து கம்பனியினரால்
(Mahawali Marine Cement Co. LTD)

அங்கிகரிக்கப்பட்ட யாழ். குடாநாட்டு விநியோகஸ்தர் :

## சீ. சிவசாமி & கம்பனி

ஏ/ஜி/3, சஞ்சி ஆராச்சி கார்டீன்,
கொழும்பு - 12.
T. P. :- 449371, 324615, 470186
Fax. 470187, 466659

(கி - 1572)

# செய்தித் துளிகள்

## வீடியோப் படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப் படவட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் அடுத்ததாக China Film Coproduction Corporation (சீன திரைப்படக் கூட்டுத் தாபனம்) இனால் தயாரிக்கப்பட்ட Zhaigynmou இயக்கிய Raisethelantern எனும் திரைப்படம் இன்று மு.ப 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(செ-6)

## கூட்டுறவுசங்க கிளை இடமாற்றம்

(மந்திகை)

தென்மராட்சி கிழக்கு பல. நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கொடிகாமம் கிளை அல்வாய் தெற்கு விநாயகர் வீதியில் இயங்குவதாக மேற்படி கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கிளை முன்பு அல்வாய் முத்துமாரி அம்மன் கோயில் வீதியில இயங்கிய வேளையில் திருட்டுச்சம்பவம் இடம்பெற்றதை அடுத்து கிளை இடமாற்றப் பட்டுள்ளது. (க-23)

## சிறுவன் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

வீட்டுப்படிக் கட்டில் ஏறும் போது வீழ்ந்ததில் கால் முறிந்த சிறுவன் ஒருவன் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றான்.

எழாலை தெற்கு மயிலங்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் உ. பிரசாந் (வயது-06) எனபவரே பிரஸ்தாப சிறுவன் ஆவான்.

(க-10)

## இளைஞனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சரவணமுத்து இராஜேஸ்வரன் (வயது-22) கடந்த 7 ஆம் திகதி முதல் காணவில்லையென்று உறவினர்களால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படடுள்ளது.

பிரஸ்தாப நபர் சம்பவ தினம் மாலை 6.00 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டவர் என்றும் இன்றுவரை வீடு திரும்பவில்லை என்றும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (க-10)

## தமிழ்க் கட்சிகளும் இணைய முடிவு

(கொழும்பு)

ஹற்டனில் தொடர்ந்து நடைபெற்று வரும் தோட்டத்தொழிலாளர் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு தமிழ்க் கட்சிகளும் தமது ஆதரவை வழங்க முன் வந்துள்ளன. (செ)

## சுற்றுலா

(கந்தர்மடம்)

யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் எச், என், டி., எ. 3ஆம் வருட மாணவர்கள் சுமார் 30 பேர் நிறுவன இயக்குநர். ரி. ராஜரட்ணம் தலைமையில் நேற்று முன்தினம் நெடுந்தீவிற்கு 3 நாள் சுற்றுலா சென்றுள்ளனர்.

(உ-37)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

[கோப்பாய்]

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, இன்று சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நவரட்ணராசா விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது.

அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் நடைபெறும் இப் போட்டிக்கு, கோப்பாய் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம், வலி. கிழக்கு பிரதேச சபை தலைவர் பூ. குணசிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கிறார்கள்.

(செ-79)

## விண்ணப்பம் கோரல்

[ஆவரங்கால்]

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படுகின்ற தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன

எதிர்வரும் 15ம் திகதி வியாழக் கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்புமாறு அதிபர் கேட்டுள்ளார்.

[செ-57]

## வீதி அழகு படுத்தல்

[நல்லூர்]

திருநெல்வேலிப் பொதுச் சந்தைப் பகுதியை அண்மித்த பலாலிவீதி, ஆடியபாதவீதிச் சந்திப் பகுதியை அழகு படுத்துவதற்கான ஒழுங்குகளை, நல்லூர் பிரதேச சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

மக்கள் மனங்களைக்கவரச் செய்யத் தக்கவகையிலான மலர்ச்செடிகளை நாட்டி, அழகுறச் செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

(செ-193)

## அனைத்துலக பெண்கள் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாவட்டமகளிர் குழு நடத்தும் அனைத்துலக பெண்கள் தின விழா இன்று மு.ப10 00மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் மாவட்ட மகளிர்குழுத்தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில்நடைபெறவுள்ளது.(செ)

## துடுப்பாட்டப் போட்டி

(நல்லூர்)

கொக்குவில் மனோன்மணி விளையாட்டுக் கழகத்தினால் மட்டுப்படுத்தப்பட்ட ஆறு பேர்கொண்டஆறுபந்துப் பரிமாற்ற துடுப்பாட்டப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.இதற்கானஒழுங்குகளை கழகத்தினர் மேற்கொண்டுள்ளனர். போட்டிகள் யாவும் வார இறுதி நாட்களில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

(க-103)

## வீதி புனரமைப்பு

(கல்வயல்)

யாழ்ப்பாணம் நல்லூர் மூத்தவிநாயகர்வீதி பலவருடகாலமாக திருத்தப்படாது குன்றும்குழியுமாகக் காணப்பட்டது. தற்போது அவ்வீதி திருத்தித் தாரிடப்பட்டுச் சிறந்த முறையில்போக்குவரத்துக்கு ஏற்றவகையிலுள்ளது.

இதனால் இவ்வீதியிலுள்ள பலஆலயங்களுக்குச் செல்லும் பக்தர்கள், பாதசாரிகள், வாகன ஒட்டுநர்கள், பாடசாலை மாணவர் ஆகியோரின்சிரமங்கள்குறைந்துள்ளன; (க- 111)

# க.பொ.த. உயர்தர மாணவர்க்கான உயிரியல்பாட வினாக்கள் - 05

## ஆசிரியர்: கே. சுகந்தன் B.Sc

### பல் தேர்வு வினாக்கள்

1) ஒடுக்கற் பிரிவானது இழையுருப் பிரிவில் இருந்து வேறுபடுவது,
   1) உருவாகும் மகட்கலங்கள் தாய்க் கலத்தில் இருந்து வேறுபடுவதால்
   2) மகட் கலங்களில் நிறமூர்த்த எண்ணிக்கை குறைக்கப்படுவதால்
   3) முற்றுப் பெற இருதடவை பிரிவு நிகழுதல்
   4) அமைப் பொத்த நிறமூர்த்தங்கள் சோடியாதல், கோப்புக்கள் அவதானிக்கப்படுவதால்
   5) மேற்கூறியவை யாவும்
2) கதிர் நார்கள் கொண்டிருப்பது,
   1) நுண் இழைகள் 2) அக்ரின், மயோசின் மூலக்கூறுகள்
   3) கிஸ்ரோன் புரதம் 4) நுண் புன் குழாய்கள்
   5) புன்மையத்திகள்
3) கீழே தரப்படும் அவத்தைகளில் மிகக் குறுகிய நேரத்தில் நிகழ்வது
   1) மேன் முக அவத்தை 2) இடையவத்தை 3) அனு அவத்தை
   4) முன்னவத்தை 5) ஈற்றவத்தை
4) சோப்புக்கள் அவதானிக்கப்படுவது
   1) முன்னவத்தை I 2) மேன்முக அவத்தை I 3) ஈற்றவத்தை I
   4) முன்னவத்தை II 5) அனு அவத்தை I
5) குறுக்குப் பரிமாற்றத்தின் உயிரியல் முக்கியத்துவம் என்னவெனில்,
   1) இலிங்க முறை இனப் பெருக்கத்திற்கு சாதகமாக அமைகிறது
   2) இழையுருப் பிரிவையும் ஒடுக்கற் பிரிவையும் வேறுபடுத்துகின்றது
   3) நிறமூர்த்தம் இரட்டிக்க அவசியமாகின்றது
   4) புதிய பரம்பரை அலகுகள் ஒன்று சேர வழிவகுக்கின்றது
   5) புணரியாக்கத்தின் போது தாயினதும் தந்தையினதும் நிறமூர்த்தங்களை வேறுபடுத்த அவசியமானது
6) அமைப் பொத்த நிறமூர்த்தங்கள் தனிப்படுத்தப்படுவது
   1) முன்னவத்தை I 2) மேன்முக அவத்தை I 3) ஈற்றவத்தை I
   4) முன்னவத்தை II 5) மேன்முக அவத்தை II
7) பிரியிழையக் கலத்தில் நிற மூர்த்த DNA யின் பின் புறமடிதல் எந்த நிலையில் நடைபெறுகின்றது
   1) இடையவத்தை 2) முன்னவத்தையின் முற்பகுதி
   3) முன்னவத்தையின் பிற்பகுதி 4) ஈற்றவத்தை 5) மேன்முகஅவத்தை
8) பின்வருவனவற்றுள் ஒடுக்கற்பிரிவின் பிரதான தன்மை அல்லாதது
   1) ஒவ்வொரு கருக்களினதும் DNA அளவின் ஒடுக்கம்
   2) அமைப்பொத்த நிற மூர்த்தங்கள் சோடியாதல்
   3) அமைப்பொத்த நிற மூர்த்தங்களின் பகுதிகளின் பரிமாற்றம்
   4 நான்கு மகட் கருக்கள் உருவாதல்
   5) தொடர்ச்சியான இரு கருப்பிரிவுகள் நடைபெறல்
9) ஒடுக்கற்பிரிவின் விளைவாக நிகழ்வது
   1) கலம் ஒன்றில் உள்ள நிற மூர்த்தங்களின் எண்ணிக்கை இரட்டித்தல்
   2) இருமடியமான கலங்களில் இருந்து ஒரு மடியமான கலங்கள் உண்டாக்கப்படல்
   3) பிறப்புரிமையாக சமனாக நான்கு மகட்கருக்கள் உண்டாக்கப்படுதல்
   4) கருக்கட்டலுக்கு முன்பு இருமடியமான கலங்கள் உண்டாக்கப்படுதல்
   5) தாய்க்கலத்திலும் உயர்ந்த DNA உள்ளடக்கத்தைக் கொண்ட மகட்கலங்கள் உண்டாக்கப்படுதல்
10) நிற மூர்த்தத்தின் பின் புற மடிதலுக்கு தேவைதயற்றது எது
   1) ATP 2) றைபோசோம 3) கரு நொதியங்கள்
   4) DNA படித்தகடுகள் 5) MRNA

### மாதிரி அமைப்புக் கட்டுரை வினாக்கள்

வினா I

A—இழையுருப் பிரிவில் அவதானிக்கப்படும்
B—ஒடுக்கற் பிரிவில் அவதானிக்கப்படும்
C—இழையுருப் பிரிவிலும் ஒடுக்கற் பிரிவிலும் அவதானிக்கப்படும்
D—இழையுருப் பிரிவிலோ ஒடுக்கற் பிரிவிலோ அவதானிக்க இயலாது.

**மேலே தரப்பட்டுள்ள A, B, C, D, ஆகியவற்றுள் பொருந்தமானதைத் தெரிவுசெய்க.**

1) உருவாகும் மகட்கலங்களில் அதிகளவு பிறப்புரிமைப் பதார்த்தம் காணப்படுவதற்குக் காரணமாக அமைவது ——————
2) நிறமூர்த்த எண்ணிக்கை குறைக்கப்படக் காரணமாக அமைவது ——————
3) மையப்பாத்துடன் கதிர் நார்கள் இணைவது ——————
4) தாய்க் கருவைச் சகல இயல்புகளிலும் ஒத்த மகட்கருக்களை உண்டாக்கக் காரணமாக அமைவது. ——————
5) தாய்க் கருவின் இயல்புகளில் இருந்து வேறுபடும் மகட் கருக்களை உண்டாக்கக் காரணமாக அமைவது ——————
6) கோப்புக்கள் அவதானிக்கப்படுவது. ——————
7) கருப்பிரிவின் போது நிறமூர்த்தங்கள் சிறு துண்டுகளாக உடைதல் அவதானிக்கப்படுவது. ——————
8) புன்கரு, கரு மென்சவ்வு மறைதல். ——————
9) மையப் பாத்துப் பகுதியில் பிளவு ஏற்படுவதால் புன்நிற மூர்த்தங்கள் கலத்தின் எதிர் எதிர் முனைவுகளைச் சென்றடைதல். ——————
10) வளர்ச்சிக்குக் காரணமாக அமைவது. ——————
11) புணரிகளை உண்டாக்க மிக அவசியமானதாகக் கருதப்படுவது. ——————
12) கருப்பிரிவு முற்றுப்பெறுவதற்கு இரண்டு பிரிவுகள் அவசியமானதாக இருப்பது. ——————
13) தாவரங்களில் நிகழ்வதும் விலங்குகளில் நிகழாததுமானது. ——————
14) இருமடியக் கலங்களை ஒரு மடியக் கலங்களாக்குவதற்கு காரணமாக அமைவது: ——————
15) இருமடியக் கலங்களில் இருந்து இருமடியக் கலங்களை உருவாக்கக் காரணமாக அமைவது. ——————
16) ஒரு மடியக் கலங்களில் இருந்து இருமடியக் கலங்கள் பெறப்படுவது: ——————

வினா II

A—மேன்முக அவத்தை B—அனு அவத்தை C—இடையவத்தை
D—முன்னவத்தை E—ஈற்றவத்தை

**மேலே தரப்பட்டுள்ள A, B, C, D, E ஆகியவற்றுள் பொருந்தமானதைத் தெரிவு செய்க**

1) அருகருகே காணப்பட்ட புன்மையத்திகள கலத்தின் எதிர் எதிர் முனைவுகளை நோக்கி நகருதல். ——————
2) கதிர் நார்கள் உடு உருவில் தோன்றுவது ——————
3) மையப் பாத்துப் பகுதியில் பிளவு நிகழுதல். ——————
4) புன் கரு, கருமென்சவ்வு போன்றன மீளத் தோன்றுவது. ——————
5) கலத்தின் மத்திய கோட்டுத் தளத்தில் நிறமூர்த்தங்கள் அடுக்கப்படுவது; ——————
6. நிறமூர்த்த வலை சுருண்டு தடிப்படைந்து நிறமூர்த்தமாக தென்படுவது; ——————
7) புன்னங்கங்கள் இரட்டிப்பது. ——————
8) புன்கரு, கருமென்சவ்வு போன்றன மறைவது. ——————
9) குழிய உருப்பிரிவு நிகழ்வது. ——————
10) நிறமூர்த்தப் பதார்த்தம் இரட்டிப்பது. ——————
11) கதிர்நார் மறைவது. ——————
12) நிறமூர்த்தம் தனிப்படுத்தப்பட்டு கலத்தின் எதிர் எதிர் முனையை நோக்கி அசைதல். ——————
13) இழையுருப் பிரிவின் போது நீண்ட காலத்தை எடுப்பது: ——————
14) கலப்பிரிவுக்குத் தேவையான ஆயத்தங்கள் நிகழ்வது. ——————

(அடுத்த சனிக்கிழமை தொடரும்)

# போரின் தாக்கம் கர்ப்பிணித் தாய்மாரில்
# போஷாக்கின்றி குழந்தைகள் பிறப்பு

## யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல்

(வடமராட்சி)
யாழ். குடாநாட்டில் நிலவிய போர்ச் சூழ்நிலைகளால் உருவான இடம்பெயர்வு மற்றும் அதனால் உண்டான வேலை வாய்ப்பின்மை காரணமாக கர்ப்பிணித்தாய்மார்கள் பலர் போஷாக்கின்றி பாதிக்கப்பட்டிருப்பதாக யா/போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறான நிலையில் பிறக்கும் குழந்தைகளும் போஷாக்கின்றி மிகவும் பாதிப்புற்ற நிலையில் நிறை குறைந்தும், நோய் எதிர்ப்புத் தன்மை இன்றியும் இருப்பதாகவும்,

யா/போதனா வைத்தியசாலையில் மாதாந்தம் நிகழும் பிரசவங்களில் அனேகமானவை நிறைகுறைந்த குழந்தைப் பிரசவங்களாக இருப்பதுடன், பொருளாதாரத் தடை மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதியின் போஷாக்கற்ற குழந்தைகள் பிறப்பு வீதத்திற்கு சமனாக இது அமைவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் கவலை தெரிவித்தன.

இதேவேளை, குறைப் பிரசவமாகும் குழந்தைகளை வைத்துப் பராமரிக்கும் பாதுகாப்பு தொட்டிகளை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு தொடர்ந்து தடை விதித்து வருவதனால் யுனிசெவ் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புத் தொட்டிகளைக் கூட எடுத்துவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-43)

## மூவர் கைது

(கொழும்பு)
இங்குராங்கொடையில் தேவாலயமொன்றைத் தாக்கியது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் மூன்று சந்தேக நபர்கள் இங்குராங்கொடைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ-4)

## பஸ் சேவை நடத்துக

[வடமராட்சி]
வடமராட்சிக்கு மணற்காடு குடத்தனைப் பகுதிகளிற்கு குறுந்தூர பஸ் சேவை நடத்துமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதி வீதி திருத்தப் படாமையால் டஸ் சேவை நடத்துவதில் சில சிக்கல்கள் எழுந்துள்ளன. [உ-43]

## மெலிஞ்சிமுனையில் சமூக விழிப்புணர்வு

### இளைஞர் யுவதிகள் ஒன்றிணைவு

(யாழ்ப்பாணம்)
மெலிஞ்சிமுனை இளைஞர், யுவதிகள் ஒன்றிணைந்து மேற்படி பகுதியில் சமூக விழிப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வகையில் இப்பகுதி வறிய மாணவர்களுக்கு மாலை, இரவுநேர பின்னூட்டல் வகுப்புக்களை நடத்தி வருவதுடன் இப்பிரதேச பாடசாலையைச்சிரமதானம் மூலம் துப்பரவு செய்து நூல் நிலைய வசதிகளைப் பெருக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர். (உ-2)

## பாராட்டு

(வடமராட்சி கிழக்கு)
வடமராட்சி கிழக்குப் பகுதியில் மண் அள்ளுவதை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் தடுத்து நிறுத்தியதை பாராட்டி பல்கலைக்கழக வடமராட்சி கிழக்கு அபிவிருத்திச் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. [உ-43]

## உதவி கோருகிறார் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)
ஆப்கானிஸ்தானில் புத்தர் சிலைகள் அழிக்கப்பட்டு வருவதைத் தடுக்குமாறு ஐங்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் கோபி அனானை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டுள்ளார்.

புத்தர் சிலைகளை அழிப்பது என்று தலிபான் எடுத்துள்ள முடிவு உலக பௌத்தர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-9)

## சண்டிலிப்பாய், பிரதேச செயலக நடமாடும் சேவை

[அரியாலை]
வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக நடமாடும்சேவை எதிர்வரும் 12 ஆம் திகதி மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மாதகல் கிழக்கு, தெற்கு, மேற்கு, ஆகிய பிரிவு மக்கள் இதில் கலந்து கொளளலாம்.

தேசிய, விசேட அடையாள அட்டை, பொதுசன மாதாந்த உதவிப்பணம், உணவு முத்திரை ஓய்வூதியம், காலம் கடந்த பிறப்புஇறப்பு, விவாக அத்தாட்சிப்பத்திரம், விவசாய காப்புறுதி, மீளக் குடியமர்வு நட்டஈடு, கடும் பாதிப்புற்றோர் நிவாரணம் போன்ற பிரச்சினைகள் ஆராயப்படும். மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகளும் ஏற்றுக் கொள்ளப்படும் என பிரதேச செயலர் வே தநாயகன் தெரிவித்துள்ளார். [உ-106]

## வரவேற்பு விழா

[கந்தர்மடம்]
யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன மாலை நேர புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு உபசார விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நிறுவன கேட்போர்கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக நிறுவன இயக்குநர். .ரி. இராஜரட்ணம் கலந்து கொள்ள உள்ளார். (உ-37)

## ஸ்தம்பித நிலையில் வடமராட்சி கிழக்கு

### அதிருப்தி நிலையில் மக்கள்

[செம்பியன்பற்று]
வடமராட்சி கிழக்கில் செயற்பட்டு வந்த மருதங்கேணி பிரதேச செயலகம், மற்றும் மருதங்கேணி கோட்டக் கல்வி அலுவலகம் ஆகியன தொடர்ந்தும் வடமராட்சியிலேயே செயற்பட்டு வருவதாக அப்பகுதி வாசிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேற்படி அலுவலகங்கள் அம்பன் மற்றும் குடத்தனையில் இயங்கக் கூடிய சூழ்நிலை திரும்பியுள்ள போதிலும் தொடர்ந்து வடமராட்சியிலேயே இயங்குவதால் வடமராட்சி கிழக்கின் செயற்பாடுகள் தொடர்ந்தும் ஸ்தம்பித நிலையிலேயே உள்ளதாகவும் அப்பகுதி வாசிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (க-42)

## மகளிர் மீன்பிடி உதவியாளர் பயிற்சி 25 பேர் தெரிவாகினர்

(சுண்டுக்குளி)
யாழ்.பிராந்திய கடற்றொழில் மற்றும் கடலக இயந்திரவியல் கல்லூரியில் மகளிர் மீன்பிடி உதவியாளர்களுக்கான பயிற்சி நெறிக்கு 25பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நாளொன்றுக்கு 75 ரூபா ஊக்குவிப்புப் படியாக வழங்கப்படுமென கல்லூரி அதிபர் இ. செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள வருமாறு.

லோகேஸ்வரி முத்தையா, அன்னலிங்கம் சுகந்தி, தர்மினி இராசலிங்கம், கத்தரின் பொனிபஸ், ஆன்சுயித்தா செபஸ்ரியன், யேமன் தனிநாயகம், கிளரன்சியா சேவியர், மகாபவானி சிவசாமி, சயித்தா சந்திரன், டயானி யோகராசா, ரக்சினி முருகன், ராதிகா கொன்ஸ்ரன்ரைன், யூலிமரினா யூடா, விஜித திருமேனி, மரியசுதாமதி மரியதாஸ், மரினா மருசலின், தட்சலாவேதநாயகம், ஜெனிந்ராஅந்தோனிப்பிள்ளை, வனிதா கார்த்திகேசு, யூலியஸ் ஆபிராம் லிங்கன், சிவநந்தனி ஜீவரட்ணம், புஸ்பலதா நாகமுத்து, தயாலினி துரைசாமி, ரேணுகா தீத்தூஸ், மருசலீன் ஜென்சிராணி, (உ-110)

## நுளம்புத் தொல்லை

[ஈச்சமோட்டை]
நீண்டநாட்களாக துப்பரவு செய்யப்படாது காணப்படும் ஈச்சமோட்டைவிதானையார் வீதிப்பகுதியில் பற்றைகள் அதிகளவு வளர்ந்துள்ளன. இதனால் இவ்வீதிப்பகுதியை அண்டிய குடியிருப்பு பகுதியில் நுளம்புத்தொல்லை அதிகரித்து காணப்படுகிறது.

இப்பகுதிகளில் உள்ள பல சிறியஒழுங்கைகள் பற்றைக் காடாக காணப்படுவதனால் விஷ ஜந்துகளின் நடமாட்டமும் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-59)

## வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)
உடுவில் மத்திய மருந்தகத்திற்கு அருகில் உள்ள வீதி, வலி தெற்கு பிரதேச சபையால் திருத்தப்பட்டு வருகிற.து (உ-2)

## சமுர்த்தி செயலணி

[யாழ்ப்பாணம்]
வலி. தெற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட உடுவில் தென்கிழக்கு (ஜே-183) பிரிவிற்கான சமுர்த்திச் செயலணி அமைப்பு சமுர்த்தி முகாமையாளர் திருமதி ஆ. ஜெயக்குமார் தலைமையில் எதிர்வரும் 14ஆம் திகதி புதன்கிழமை அண்ணா ச.ச. நிலைய மண்டபத்தில் பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (உ-2)

## சத்திர சிகிச்சை சேவை

(வடமராட்சி கிழக்கு)
வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் எம்.எஸ்.எவ்.மருத்துவ நிபுணர்களால் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் சத்திர சிகிச்சைச்சேவையும் வெள்ளிக்கிழமைகளில் பெண் நோயியல் சம்பந்தமான சிகிச்சையும் இடம்பெற்று வருவதாக வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் இ.மயிலேறும் பெருமாள் தெரிவித்துள்ளார். [உ-43]

## தென்மராட்சியில் மக்கள் மீளக் குடியமரும் பகுதிகள் சுற்றிவளைப்பு

(வடமராட்சிகிழக்கு)
கடந்த செவ்வாய் தொடக்கம் புதன்மதியம்வரை தென்மராட்சிப்பகுதி-வரணி தொடக்கம் கொடிகாமம் வரையான பகுதிகளை படையினர் சுற்றி வளைத்து தேடுதல் மேற்கொண்டனர்.

இச்சுற்றிவளைப்பு நடவடிக்கை காரணமாக வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடையேயான போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன.

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவைகளும் இடம்பெறவில்லை.

விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் சிலர் இப்பகுதிகளுக்குள் ஊடுருவியிருப்பதாக கிடைத்த தகவலின் பேரிலேயே சுற்றிவளைப்பு இடம்பெற்றதாக படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இச்சுற்றிவளைப்பின்போது பொதுமக்கள் எவரும் கைது செய்யப்பட்டதாகவோ அன்றி தடுத்து வைக்கப்பட்டதாகவோ தகவல்கள் கிடைக்கவில்லை.

மேற்படி பகுதிகளில்கடந்த வருட அனர்த்தங்களை அடுத்து இடம்பெயர்ந்த மக்கள் தற்போது படிப்படியாக மீளக்குடியேறி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-43)

## தமிழ்மொழி மூல ஆசிரியர் 50 பேர் நியமனம்

(யாழ்ப்பாணம்)
வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் யாழ். மாவட்டத்துக்கு தமிழ் மொழி மூல தகுதிகாண் ஆசிரியர்கள் 50 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

நியமனம் வழங்கப்பட்ட 50 பேரில் யாழ். வலயத்திற்கு நியமிக்கப்பட்ட 13 பேரின் விபரம் வருமாறு,

சூசைப்பிள்ளை ஜெனாட் ஸ்ரீபன்–ஆங்கிலம், றிசா சியாமளா அன்ரனி- ஆங்கிலம், சிறிபதி திரிவேணி- ஆங்கிலம், கிறிஸ்ரினா பாக்கிய நாதன்- ஆங்கிலம், பாலசுந்தரம் சசிக்குமரன்- உடற்கல்வி, சுகுணாளினி கந்தையா- ஆங்கிலம், ரதிவதனி தியாகராஜா- ஆங்கிலம், கனகசபாபதி வானதி- ஆங்கிலம், றிஸ்வி தியாகராஜா- ஆங்கிலம் பாலசுப்பிரமணியம் அரியதாஸ்- சித்திரம், நடராசா கஜேந்திரன்- உடற்கல்வி, வடிவேலு செந்தூரன் உடற்கல்வி, முருகேசு சிவப்பிரகாசம் ஆரம்பக்கல்வி.

ஏனைய வலயங்களுக்கு நியமனம் செய்யப்பட்டவர்களின் விபரம்,

தர்மலிங்கம் கிருபாகரன், பாலசிங்கன் ரவீந்திரன், ஜோசப் மரிய அசம்ரா, கௌசலா இராசசேகரம், நிரஞ்சினி கோபால கிருஸ்ணன், கவிதா விநாசித்தம்பி, யசோதை நடராஜசுந்தரம், தேவகி இராமசாமி, இரட்ணசே திஜனகி, நந்தினி கிருஸ்ணபகவன், சுப்ரமணியம் சிவகௌரி, ரஜனி பொன்னம்பலம், புஸ்பலிங்கம் கவிதா, கங்கேசன் சிவரஞ்சன், சின்னராஜா கௌசிகன், ஆனந்தராஜா பவானந்தன்,

இரட்ணம்கலைவாணி, கனகசிங்கம், சண்முகதாஸ், பூலோகசேகரம் நளாயினி, இராஜரெட்ணம் உதயசுதர்சினி, நவரெட்ணம் பபிதா, இலச்சுமணன் குமணன், தியாகராஜா கமலவேணி, வேலாயுதபிள்ளை மேகலா, கந்தையா சிறிகருணாகரன், நடராஜா தர்சினி, கணேசராசா சேந்தினி, நாகராஜா திலகராஜா, டொமினிக் யூட் நிர்மலன், சுப்ரமணியம் உதயணன், கனகசபை வாசுகி, சடாட்சரம் லதா, கௌசல்யா விமலதாசன், நடராஜா ஜெயகௌரி, லூர்தகவி, நடராஜா தயானி, நடராஜா தயாகரன்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் நியமனம் வழங்கப்பட்டுள்ள இவர்களுக்கான நியமனக்கடிதங்களை தத்தம் வலயங்களுக்குச் சென்று இன்று பெற்றுக்கொள்ளுமாறு கல்வித்திணைக்கள வட்டாரங்கள் அறிவித்துள்ளன. (உ-10-23)

# தமிழர் தாயகக் கொள்கையிலேயே தீர்வு முயற்சிகள் நடைபெறுகிறது

## ஜே. வி. பி. குற்றச்சாட்டு

தமிழர் தாயகக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே சமாதானத்திற்கான தீர்வு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என ஜே. வி. பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

இரண்டுமாதங்களுக்குள் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி சந்திரிகாகுமாரணதுங்கா இந்தியாவில் அறிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளும்தமிழர் தாயகக் கோட்பாட்டிலேயே தீர்வுகள் அமையவேண்டும் எனக் கூறியுள்ளனர்.

இந்த சமஷ்டி அமைப்பிற்கு ஏற்றவகையிலேயே நோர்வே இப்பொழுது நடவடிக்கை எடுத்திருப்பதாக நோர்வே தூதுவரின் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணையின் விவாதத்தின்போது கொழும்பு மாவட்ட ஜே. வி. பி. உறுப்பினர் விமல்வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (செ)

# ஏப்-22-ல் ஒரு மணிநேரம் நீர் அருந்த வேண்டாம்

(கொழும்பு)

''ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி நாட்டு மக்கள் அனைவரும் ஒரு மணிநேரம் நீர் அருந்துவதைத் தவிர்க்கவும்''.

இவ்வாறு பிரதி சபாநாயகர் சரத் முனசிங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆனையிறவில் படையினருக்கு ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்து படையினர் பலர் தண்ணீர் இன்றி தாகத்துடன் தவித்துக் கொண்டே இறந்தனர்.

அவ்வாறு இறந்தவர்களை நினைவு கூருமுகமாகவே ஏப்ரல் 22-இல் ஒரு மணி நேரத்திற்கு நீர் அருந்துவதைத் தவிர்க்குமாறு பிரதி சபாநாயகர் கேட்டுக் கொண்டுள்ளார். (செ)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மார்ச் மாதம் 06 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றது.

### ஊர்காவற்துறை

14005 ஏ 14005 பி
14586 ஏ 14629 ஏ
14729 ஏ 14729 பி
14729 சி 14738 ஏ
14738 பி 14755 ஏ

### கரவெட்டி

171109 ஏ 171119 ஏ
171121 ஏ 184505 ஏ
1766209ஏ 176318 ஏ
176350 ஏ 176350 பி
176350 சி 177549 ஏ
177566 ஏ 177599 ஏ
177599 பி 277654 ஏ
177654 பி 178657 ஏ
177721 ஏ 177884 ஏ
180597 ஏ 180598 ஏ
180598 பி 181062 ஏ
181062 பி 181086 ஏ
181086 பி 181218 ஏ
181238 ஏ

### கோப்பாய்

163739 ஏ 163877 ஏ
163877 பி 163877 சி
168362 ஏ 173295 ஏ
177363 ஏ 177363 பி
177363 சி 177400 ஏ
177400 பி 180749 ஏ
180749 பி 180749 சி
180753 ஏ 180753 பி
180753 சி 180758 ஏ
180758 பி 180810 ஏ
180810 பி 180821 ஏ
180821 பி 180861 ஏ
180979 ஏ 180979 பி
180986 ஏ 180986 பி
180992 ஏ 180993 ஏ
180994 ஏ 182897 ஏ
182897 பி 182899 ஏ
182909 ஏ 182924 ஏ
182924 பி 182945 ஏ
182945 பி 182945 சி
182945 டி 182945 ஈ
182985 ஏ 182985 பி
183001 ஏ 183007 ஏ
183007 பி 183019 ஏ
183019 பி 183019 சி
184040 ஏ 184069 ஏ
184092 ஏ 184092 பி
186335 ஏ 186335 பி
184340 ஏ 184340 பி
184609 ஏ 184609 பி

### சங்கானை

157124 ஏ 171009 ஏ
171118 ஏ 184303 ஏ
179117 ஏ 179117 பி
179491 ஏ 179491 பி
183080 ஏ 183290 ஏ
183290 பி 183372 ஏ
183372 பி 183396 ஏ
183434 ஏ 183461 ஏ
183461 பி 183461 சி
183525 ஏ 184880 ஏ
184957 ஏ 184982 ஏ
185028 ஏ

### சாவகச்சேரி

171110 ஏ 179691 ஏ
179691 பி 184112 ஏ
184113 ஏ 184114 ஏ
184301 ஏ 184302 ஏ
184321 ஏ 184325 ஏ

### நெடுந்தீவு

14579 ஏ 14725 ஏ
14725 பி 14725 சி
14725 டி

### யாழ்ப்பாணம்

171442 ஏ 184305 ஏ
184309 ஏ 150076 ஏ
181748 ஏ 181825 ஏ
181827 ஏ 181876 ஏ
181835 ஏ 181885 பி
181885 சி 181885 டி
181975 ஏ 181975 பி
082024 ஏ 182024 பி
182162 ஏ 182936 ஏ
184359 ஏ 184359 பி
184421 ஏ 184433 ஏ
184438 ஏ 184496 ஏ
184496 பி 184502 ஏ
184546 ஏ 184546 பி
184546 சி 184597 ஏ
184616 ஏ 184621 ஏ
184621 பி 184630 ஏ
184645 ஏ 184645 பி
184687 ஏ 184691 ஏ
184691 பி 184691 சி
184691 டி 184795 ஏ
184795 பி 184805 ஏ
185870 ஏ 185924 ஏ
185924 பி 185924 சி
185924 டி 185938 ஏ
185938 டி 185938 சி
185951 ஏ 185952 ஏ
185983 ஏ 185983 பி
185983 சி

### நல்லூர்

170722 ஏ 170817 ஏ
170951 ஏ 171023 ஏ
171024 ஏ 171115 ஏ
171186 ஏ 171297 ஏ
171423 ஏ 171430 ஏ
171431 ஏ 171434 ஏ
171435 ஏ 171439 ஏ
171456 ஏ 171474 ஏ
179620 ஏ 179620 பி
179645 ஏ 179645 டி
179705 ஏ 179720 ஏ
179720 பி 184074 ஏ
184074 பி 184079 ஏ
184125 ஏ 184125 பி
184304 ஏ 184306 ஏ
184307 பி 172117 ஏ
173739 ஏ 173739 பி
175455 ஏ 178191 ஏ
178198 பி 178198 சி
178198 டி 178455 ஏ
178455 பி 180213 ஏ
180280 ஏ 181783 ஏ
181782 பி 181783 சி
183783 டி 181843 ஏ
181843 பி 181843 சி
181843 டி 181843 ஈ
181882 ஏ 181883 ஏ
181968 ஏ 181960 ஏ
181993 ஏ 181993 பி
181993 சி 182030 ஏ
182030 பி 182045 ஏ
182130 ஏ 182130 பி
182130 சி 182130 டி
182130 ஈ 182159 ஏ
184330 ஏ 184330 பி
184351 ஏ 184356 ஏ
184396 டி 184398 ஏ
184428 ஏ 184455 ஏ
184455 பி 184455 சி
184455 டி 184490 ஏ
184493 ஏ 184501 ஏ
184507 ஏ 184508 ஏ
184508 பி 184508 சி
184508 டி 184515 ஏ
185520 ஏ 184520 பி
184520 சி 184520 டி
184544 ஏ 184558 ஏ
184558 பி 181569 ஏ
184569 பி 184583 ஏ
184584 ஏ 184584 பி
184614 ஏ 184614 பி
184614 சி 184632 ஏ
184632 பி 184632 சி
184660 ஏ 184660 பி
184660 சி 184660 டி
184724 ஏ 184724 பி
184768 ஏ 184768 பி
184784 ஏ 184636 ஏ
185902 ஏ 185902 பி
185939 ஏ 185939 பி
185938 சி 185939 டி
181698 ஏ 185014 ஏ
185014 பி 185029 ஏ
185029 பி

### பலாலி

174423 ஏ

### பருத்தித்துறை

158437 ஏ 158437 பி
158437 சி 160253 ஏ
160253 பி 160253 சி
160253 டி 165268 ஏ
167445 ஏ 169786 ஏ
169786 பி 169786 சி
174231 ஏ 177730 ஏ
177730 பி 180388 ஏ
180518 ஏ 180587 ஏ
180600 ஏ 180600 பி
180614 ஏ 180614 பி.
181076 ஏ 181076 பி
181113 ஏ 181149 ஏ
181153 ஏ 181170 ஏ
181172 ஏ 181220 ஏ
181220 பி 181225 ஏ
181225 பி 181342 ஏ
181342 பி 181342 சி
161452 ஏ

### சண்டிலிப்பாய்

171108 ஏ 182742 ஏ
182849 ஏ 184873 ஏ
184873 பி 184873 சி
184879 ஏ 184925 ஏ
184925 பி 184925 சி
184933 ஏ

### தெல்லிப்பழை

171112 ஏ 171113 ஏ
171114 ஏ 184308 ஏ
183398 ஏ 183399 ஏ
183299 பி 183399 சி
183399 டி 185099 ஏ
185099 பி 185107 ஏ

### உடுவில்

171111 ஏ 171120 ஏ
179811 ஏ 179811 பி
184034 ஏ 184034 பி
184034 சி 184034 டி
184034 ஈ 184034 எவ்
184098 ஏ 184101 ஏ
184101 பி 184101 சி
184115 ஏ 184123 ஏ
184127 ஏ 184151 ஏ
184154 ஏ 184157 ஏ
184310 ஏ 178573 ஏ
178573 பி 178573 சி
179407 ஏ 180318 ஏ
180318 பி 182751 ஏ
184867 ஏ 184867 பி
184878 ஏ 185063 ஏ
185064 ஏ 185104 ஏ
185135 ஏ 185135 பி
185138 ஏ 185192 ஏ
185192 பி 185210 ஏ
185210 பி 185303 ஏ
185303 பி 185312 ஏ

### வேலணை

14061 ஏ 14061 பி
14614 ஏ 14645 ஏ
14645 பி 14649 ஏ
14649 பி 14649 சி
14649 டி 14693 ஏ
14693 பி 14696 ஏ
14696 பி 14723 ஏ
14723 பி

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட

# பதிவுசெய்த கழ.இடையில் மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசெயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமைபி.ப 2.00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் ஆ மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப் போட்டிக்கு,யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (செ)

# பண்ணிசை,விளையாட்டுப் போட்டிகள்

(நல்லூர்)

யாழ்-வண்ணை நீராவியடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாணவர்களிடையே சைவசமய அறிவை வளர்க்கும் நோக்குடனும்,பண்ணிசையைப்பரப்பும் எண்ணத்துடனும்,பண்ணிசைப் போட்டியையும்,மாணவர்களின் தேகாரோக்கியத்தைப் பேணும் வகையில் விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தவுள்ளதாக. சங்கத் தலைவர் கைசூசி வரட்ணம் தெரிவித்துள்ளார்.

மேற்படி போட்டிகளின் பரிசளிப்புவைபவம், எதிர்வரும் சித்திரைப் புதுவருட தின விழாவின்போது இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-103)

# எழுச்சி மகாநாடும் பிரதிநிதிகள் கூட்டமும்

[யாழ்ப்பாணம்]

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்ட கிளையின் எழுச்சிமகாநாடும் பிரதிநிதிகள் சபைக் கூட்டமும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்ட நிர்வாகி வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு,யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார்.(செ)

# பாதிக்கப்பட்ட பெண்ணின் நஷ்ட ஈட்டுத் தொகையை மோசடி செய்தோர் கைது

(வவுனியா)

குவைத்திலிருந்து பாதிக்கப்பட்ட நிலையில் நாடுதிரும்பிய பெண்ணொருவரின் நஷ்ட ஈட்டுத் தொகையான2இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவை மோசடி செய்த வவுனியாவைச் சேர்ந்த மரணவிசாரணைக் குழுவின் அதிகாரி ஒருவரும் கிராம சேவையாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பெண் தனது நஷ்ட்ட ஈட்டுப் பணத்தைப் பெறுவதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்குச் சென்றபோது அந்தப் பணம் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து இவர் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவினரிடம் முறையிட்டிருந்தார்.

இந்த முறைப்பாட்டினையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் வவுனியாவிலுள்ள மரண விசாரணை அதிகாரி ஒருவர் தன்னுடைய மனைவியின் படத்தை ஒட்டி கிராம சேவையாளரைக் கொண்டு உறுதிப்படுத்தி இப்பணத்தை பெற்று மோசடி செய்தது தெரியவந்துள்ளது,

இதனையடுத்து வவுனியா நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட இருவரும் இம் மாதம் 13 ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி எம் இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளதுடன் திடீர் மரண விசாரணை அதிகாரியின் பதவியையும் இடைநிறுத்தி வைக்குமாறு நீதியமைச்சைக் கோரியுளளார். (உ-5)

# மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரியின், இன்ரறக் கழகம், விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்த விருக்கும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

6 பேர்கொண்ட 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக அமையும் இப் போட்டியில் பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் விண்ணப்பப் படிவங்களைமேற்படிபாடசாலைக்கு அருகில் உள்ள துர்க்கா தொலைத்தொடர்பு நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

நூலக ... யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

### விதியையும் மாற்றலாம்

முன் பிறவியில் செய்த குற்றங்களுக்காக நாம் துன்பப்படவேண்டும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால், வேறு வழியில்லாமல் மேலும் மேலும் குற்றங்களைச் செய்யலாம் என்பது இதற்குப் பொருள் இல்லை. பார்க்கப் போனால் நமது துன்பங்களை நாம் நமது முயற்சியினால் குறைத்துக்கொள்ள முடியும். இதையே தான் சாஸ்திரங்கள் பிராயச்சித்தங்கள் என்று குறிப்பிடுகின்றன. விதியை மாற்ற முடியாது என்றால், பிராயச்சித்தம் என்பது அர்த்தமில்லாததாகப் போய் விடும். மகாபாரதத்தில் விதி ஒரு வயலுக்கும், சுயேச்சை என்பது விதை விதைத்துப் பயிரிடுவதற்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறது மண்வளம் நன்றாக இல்லாவிட்டாலும் உரம் முதலியவற்றைப் போட்டு நல்ல விளைச்சலைப் பெற முடியும். அதேபோல விதியின் பாதை அனுகூலமாக இல்லாவிட்டாலும், நமது இடைவிடாத முயற்சிகளால் நல்ல முடிவுகளை நாம் பெற முடியும்.

ஆனால் நாம் மேற்கொள்ள வேண்டிய முயற்சியின் அளவை முன் கூட்டியே தீர்மானிக்க முடியாது. இது ஒரு சுவரிலிருந்து ஆணியைப்பிடுங்குவதற்கு ஒப்பானதாகும். நம்முடைய செயலுக்கு அந்த ஆணி எந்த அளவுக்கு எதிர்ப்புகளைக் கொடுக்கும் என்பது தெரியாது. ஆணி வெளியில் வரும் வரையில் நாம் மேலும் மேலும் அதிக பலத்துடன் அதை இழுத்துக் கொண்டே இருப்போம். அதேபோலத் தான், விதியை ஒட்டியும், எதிர்த்தும் நாம் வாழ்வதுங்கூட விதியானது. எப்போதும் நம்முடைய முயற்சியை எதிர்ப்பதாகச் சொல்ல முடியாது. சில சமயங்களில் அது நம்முடைய பிரயத்தனத்துக்கு அனுசரணையாக இருப்பதும் உண்டு இத்தகைய சமயங்களில் மிகக் குறைந்த முயற்சியே நமக்கு வெற்றியைக் கொடுக்கப் போதுமானதாக இருக்கும்.

ஆனால், அதற்காக நாம் எல்லாம் விதிப்படிதான் நடக்கும் என்று எந்த முயற்சியையுமே செய்யாமல் இருந்து விட்டால், விதி வெற்றியைக் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பமே இல்லாமல் போய்விடும். இதில் முக்கியமாக நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன வென்றால், விதி ஒருவனை ஒரு விதமாகவோ, வேறு விதமாகவோ நடக்கக் கட்டாயப் படுத்தாது. ஆனால் அப்படி நடக்கத் தூண்டும் வாசனைகளை அது உற்பத்தி செய்கிறது.

இந்தச் சமயத்தில் நடக்கும் சம்பவங்களை ஒருவனால் மாற்ற முடியும் என்பது உண்மையானாலும் இதனால் எல்லாமே நம் வசத்தில் இருப்பதாகக் கொள்ள முடியாது. உதாரணமாக நாம் பிறக்கும் சூழ் நிலை வளரும்போது அனுபவிக்கும் வாழ்க்கை, விபத்துக்கள் ஆகியவை நம் வசத்தில் இல்லை. இதேபோல வியாதிகள் வருவதையும் எப்போதும் நம் செயல்களால் தடுத்து விட முடியாது.

க.க. இராமலிங்கம்

# விலைவாசி உயர்வைக் கண்டித்து ஐ.தே.க. பெண்கள்குழு ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

விலைவாசி உயர்வைக் கண்டித்து ஐ. தே. கட்சியின் பெண்கள் அணி, சர்வதேச மகளிர்தினமான நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

ஐ. தே. கட்சியின் ஐக்கிய லக் வனிதா பெண்கள் பிரிவினரால் இப் பேரணி நடத்தப்பட்டது.

எண்ணூறிற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்ட இப் பேரணிக்கு முன்னாள் எம். பி. ரேணுகா ஹேரத் தலைமை வகித்தார்.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஐ. தே. கட்சி உறுப்பினர்கள பலரும் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் கலந்து கொண்டோர், ''எமது வயிற்றில் அடிக்காதே'' ''பால்மா விலையைக்குறை'' ''பெண் அரசி ஆனதால் எமது அடுக்களை காய்ந்து விட்டது'' போன்ற சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் சென்றனர்.

கொளுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது, வயோதிபப் பெண்களும் இப் பேரணியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது (செ)

## வருடாந்த உற்சவம்

(நல்லூர்)

யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம், இம்மாதம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகவுள்ளது. (உ-103)

## இல்ல மெய்வன்மை போட்டிகள்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் சென்றோக் மகாவித்தியாலய மாணவர்களின் இல்லமெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (16-03-2001) சென்றோக்விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (க-59)

## வீதி திருத்தம் செய்யப்பட்டது

(கல்வயல்)

நீண்டகாலமாகத்திருத்தஞ் செய்யட்படாது இருந்த வட்டுக்கோட்டை றாத்தலடிச் சந்தை வீது வலி. தெற்குப் பிரதேச சபையால் திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது.

இதனால் இவ் வீதியைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்களினதும், பொது மக்களினதும் சிரமங்கள் பெரிதும் குறைந்துள்ளது. (செ- 111)

## வீதிதிருத்தும் பணிஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

நீண்டகாலமாக திருத்தஞ் செய்யப்படாதிருந்த சுழிபுரம சத்தியக்காட்டு வீதி திருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதி திருத்தஞ் செய்யப்படாமை பற்றி, இப்பகுதி மக்கள் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனிடம் முறையீடு செய்தமையை அடுத்தே இத் திருத்தப்பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. (செ-3)

## ஆசிரியர் பயிற்சி

(ஆவரங்கால்)

மனித மேம்பாட்டுக் கல்வி சத்தியசாயி முறை பற்றிய தரம் 1 ஆசிரியருக்கான பயிற்சி யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் வரும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 8. 30 தொடக்கம் பி. ப. 3. 30 மணி வரை இடம்பெறும்.

தரம் 1 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை பாடநூல், கைநூல் எழுது கருவி ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். (உ-57)

## பருத்தித்துறை வாசகர்கள் 'வலம்புரிக்கு' புகழாரம்

(கல்வயல்)

'வலம்புரி' பத்திரிகை பாடசாலை மாணவர்களுக்குஏற்ற தரமான பத்திரிகை எனப் பருத்தித்துறை நகரசபை நூலக வட்டத்தால் சிபார்சு செய்யப்பட்டதுடன் புகழாரமும் சூட்டப்பட்டுள்ளது

தரம் 05 மாணவர்களுக்கான புலமைப் பரிசில்பரீட்சை வினா-விடை, க. பொ த உயர்தர மாணவர்களுக்கான பொது உளச்சார்பு மற்றும் இதர விடயங்கள் இலகு தமிழில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் ட்டுள்ளது. (க-111)

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவில்

## கழகங்களுக்கு இடையில் விளையாட்டுப் போட்டி

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு பிரதேசசெயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டி, இன்றும் நாளையும்நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நாளை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஜே எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள பரிசளிப்பு வைபவத்திற்கு, யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ். பாலச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (செ-75)

## கல்வியியல் கல்லூரிக்கு உலக வங்கியின் நிதி

### மாவை தெரிவிப்பு

(அச்சுவேலி)

யாழ்ப்பாணத்தில் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புதிய கட்டிடத் தொகுதியை அமைப்பதற்காக உலக வங்கியினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை எத்தகைய சவால்களையும் எதிர் கொண்டு ஏனைய தமிழ்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து உரிய நோக்கத்திற்காக பயன்படுத்த முயற்சிப்பேன்.

கடந்த திங்கட்கிழமை யாழ். கல்வியியற் கல்லூரியின்பீடாதிபதி, விரிவுரையாளர்கள், மாணவர்களுடன் நடைபெற்ற விசேட சந்திப்பொன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட பாரராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிர ஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ் கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி பா தனபாலன் தலைமையில் இச் சந்திப்பு இடம்பெற்றது. (க-14)

## திருடன் பிடிபட்டான் சித்தன்கேணியில் சம்பவம்

(சங்கானை)

சித்தன் கேணிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை முற்பகல் வேளையில் திருடன் ஒருவன் அப்பகுதி மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு சங்கானை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டான்.

மேற்படி நபர் அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய போது ஊர் இளைஞர்கள் சிலர் விசாரித்தனர்

இதன் போது சித்தன்கேணி மற்றும் வட்டுக்கோட்டைப் பகுதிகளில் இடம்பெற்ற பல திருட்டுச் சம்பவங்களுடன் அந் நபருக்குத் தொடர்பிருப்பது தெரியவந்துள்ளது (க-124)

## ஜனாதிபதி சந்திரிகா 25 வருடம் ஆட்சிசெய்வார்

### எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இன்னும் இருபத்தி ஐந்து வருடங்கள் இலங்கையில் ஆட்சி புரிவார். அவ்வளவு திறமை வாய்ந்தவர் என ஐ. தே. க யின் முன்னாள் அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீட் கூறியிருந்தார்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் யூ. எல். எம். மொகைதீன் கூறியுள்ளார்:

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சி இன்னும் ஆறு மாத காலத்திற்குள் கவிழ்ந்து விடும் என ஐ தே க. கூறியிருந்ததனை மறுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ தே. கட்சி பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சி கவிழும் என கனவு காண்பது நிறைவேறாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ)

## பல நாள் திருடன் ஒருநாள் பிடிபட்டான்

(ஆவரங்கால்)

பல்வேறு தேங்காய் திருட்டுக்களுடன் தொடர்பு பட்ட சிறுப்பிட்டியைச் சேர்ந்தவர் தென்னை மரத்தில் ஏறி தேங்காய் பிடுங்கிய சமயம் கையும் களவுமாக பிடிபட்டார்.

சிறுப்பிட்டிப் பகுதி விடொன்றில்உள்ளதென்னை மரங்களில் ஏறி வாகத் தேங்காய் பிடுங்கிய சமயமே வீட்டு உரிமையாளர்கள் இவரைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

மேற்படி திருடன், தான் இதற்கு முன்பு புரிந்த பல்வேறு திருட்டுக்களை ஒப்புக் கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (உ-57)

## கள்ளுத்தவறணையில் கைகலப்பு கத்தி வெட்டில் முடிவு

### குரும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

கள்ளுத்தவறணையில் ஏற்பட்ட கைகலப்பு கத்தி வெட்டில் முடிவுற்றதில் கத்தி வெட்டிற்கு இலக்கான ஒருவர் மரணமடைந்துள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி நாயன் மார்க்கட்டுப் பகுதியில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் அரியாலையில் இருந்து இடம் பெயர்ந்து நாயன்மார் கட்டில் வசித்து வந்த 6 பிள்ளைகளின் தந்தையான சேனாதிராசா சந்திரமோகன் என்பவரே மரணமடைந்துள்ளார். (உ-104,10)

## மரங்கள் பாதுகாப்பில் வட. மக்கள் முன்மாதிரி

(கல்வயல்)

மரங்களைப்பாதுகாப்பதில் அல்வாய், பருத்தித்துறை மக்கள் முன்னோடிகளாகத் திகழ்கின்றார்கள்.

இப்பகுதி மக்கள் இறந்தவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வுகளிற்கு வாழை மரம், தோரணம் ஆகியவைகளைக் கட்டுவதைத் தவிர்த்து வருகிறார்கள்.

இதற்குப் பதிலாக நன்கு முற்றிய தென்னோலைகளையே வீதியோரத்தில் தூரத்திற்கு ஒன்றாக கட்டி இறுதி அஞ்சலி நிகழ்வுகளை நடத்திவருகின்றனர்.

தென்னை மரங்களில் குருத்துக்கள் வெட்டப்படுவதால் வண்டுத்தாக்கம், பிறநோய்களுக்குட்படுகின்றது இதனால் தென்னையின் பயன் பெரிதும் வீழ்ச்சியடைவதாகவும், இதனையடுத்தே மேற்படி இடங்களைச் சேர்ந்தவர்கள் தென்னை குருத்துக்களை வெட்டுவதை தவிர்த்து வருகின்றனர். (செ-111)

## பத்திரிகையாளர் மாநாடு

(வடமாராட்சி கிழக்கு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். அலுவலகத்தில் எதிர் வரும் 31 ஆம் திகதி பத்திரிகையாளர் மாநாடு ஒன்று இடம் பெற வுள்ளது. (உ-43)

# எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தல்

# அ.இ.அ.தி.மு.க.விற்கு வெற்றிவாய்ப்பு குறைவு

## அரசியல் அவதானிகள் ஆரூடம்

(சென்னை)

அ.இ.அ.தி.மு.க. தமிழக சட்டசபைத் தேர்தலில் போட்டியிட இருக்கும் இடங்களின் எண்ணிக்கையை நோக்கும் போது அது வெற்றி பெறும் வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர் வரும் சட்டசபைத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. 126 தொடக்கம் 135 வரையான இடங்களிலேயே போட்டி இடவுள்ளது. 234 இடங்கள் உள்ள சட்டசபை அ.இ.அ.தி.மு.க. ஆட்சி அமைக்க வேண்டுமானால் குறைந்தது 118 இடங்களை யாவது தனதாக்கிக் கொள்ள வேண்டும். 126-135 இடங்களில் போட்டி இட்டு 118 இடங்களை கைப்பற்றுவது சாத்தியக் குறைவானதாகும்.

எனவே எதிர்வரும் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க.விற்கு வெற்றிவாய்ப்பு மிகக் குறைவாகவேயுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## ஐவர் பலி

[புதுடில்லி]

இந்தியாவின் வட கிழக்கு மாநிலமான அஸாமில் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி 5 பேர் இறந்துள்ளனர்.

கடந்த மாதம் இதே பகுதியில் வோடோ இனத்தவர்களின் மீது சந்தாய்திய இனத்தவர்கள் நடத்திய தாக்குதலுக்குபழி தீர்க்கும் முகமாகவே இத்தாக்குதல்நடத்தப்பட்டிருக்கவேண்டும்எனக் கருதப்படுகிறது. (உ-9)

### அத்தியாவசியப் பொருட்கள்

# ஈராக்கிற்கு அனுப்புவது குறித்து ஐ. நா. சபையில் ஆராய்வு

(வாஷிங்டன்)

பாதுகாப்புச் சபையின் எந்தவித அனுமதியும் இல்லாமால் அத்தியாவசியப் பொருட்களை ஈராக் நாட்டிற்கு அனுப்புவது தொடர்பான பிரேரணை ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை முன்வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

ஈராக்கில் உள்ள இராணுவத்தினர் பயன்படுத்தாத வகையிலான அத்தியாவசியப் பொருட்களை அனுப்ப ஐ.நா சபை தீர்மானித்துள்ளதாகவும் அந் நாட்டு மக்களின் நலனில் தான் அக்கறையாக இருப்பதாகவும் ஐ.நா.சபை பொதுச் செயலர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மனிதாபிமான முறையில் அத்தியாவசியப் பொருட்களை ஈராக்குக்கு அனுப்புவது தொடர்பாக ஐ.நா பாதுகாப்புச் சபையினர் கடுமையாக ஆராய்ந்து வருவதாகவும் அறியமுடிகிறது. (க-9)

## உலக தரிசனம்

## நேபாளப் பிரதமர் பிரான்ஸ்விஜயம்

(காட்மண்டு)

நேபாளப் பிரதமர் சிர்ஸாத் பிரஸாத் கொய்ராலா மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு பிரான்ஸுக்கு சென்றுள்ளார்.

கடந்த 150 ஆண்டுகளில் நேபாளப் பிரதமர் பிரான்ஸுக்கு விஜயம் செய்வது இதுவே முதல்தடவைஎன்பது குறிப்பிடத்தக்கது (க-09)

# அமெரிக்க உப-ஜனாதிபதி மருத்துவ மனையில்

(வாஷிங்டன்)

இருதய நோயினால் பாதிக்கப்பட்ட அமெரிக்காவின் உப ஜனாதிபதி டிக்செனி வாஷிங்டனில் உள்ள பல்கலைக்கழக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

60 வயதான டிக்செனி கடந்த நவம்பர்மாதம் மாரடைப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

இவர் 1988ஆம் ஆண்டிலும் ஒரு இருதய மாற்றுச் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

டிக்செனி இருதய நோய்க்கு உட்பட்டிருப்பது இத்துடன் நான்காவது முறையென்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

## இரு புலிகள் பலி

(புதுடில்லி)

வட இந்திய மாநிலமான உத்திராஞ்சலில்உள்ள பூங்கா ஒன்றில் இரண்டு புலிகள் கொல்லப்பட்டுள்ளன

சென்ற மாதம் இதே பூங்காவில் 5 யானைகள் கொல்லப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. [உ-9]

# ஒன்பது வயது சிறுமிக்கு பெண் குழந்தை

## வைத்திய சாலைவட்டாரம் ஊர்ஜிதம்

(பாங்கொக்)

தாய்லாந்தில் 9 வயதுச்சிறுமிக்கு பெண்குழந்தை பிறந்திருப்பது தற்போது தெரியவந்துள்ளது.

இச்சிறுமியின் 27 வயதுக் கணவர் குழந்தைப் பதிவை மேற்கொள்ளச்சென்ற சமயம் அதிகாரிகள் தாயாரின்விபரங்களை கேட்டபோது அக்குழந்தையின் தாயாரது வயது 9 என கண்டுபிடிக்கப்பட்டது. இத்தகவலை முதலில் நம்ப மறுத்த அதிகாரிகள் பின்னர் வைத்தியசாலையை அனுகி தகவலை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டதாக தெரிய வருகிறது.

தற்போது தாயும் சேயும் நலமே இருப்பதாக வைத்தியர்கள்தெரிவித்துள்ளார்கள். (க-9)

# இத்தாலிய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது

## ஜனாதிபதி காலோ தெரிவிப்பு

(றோம்)

இத்தாலியின் நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கலைக்கப்பட்டு விட்டதுஎன அந்நாட்டு ஜனாதிபதி காலோ அக்சல்கியோ அறிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப்போருக்குப்பின் உள்ள 13 ஆவது நாடாளுமன்றத்தை கலைத்த ஜனாதிபதி இத்தாலியின் பொதுத்தேர்தலை எதிர்வரும் மே மாதம் நடத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

இத்தாலியின் கீழ் மற்றும் மேல் சபைகளின் முக்கியஸ்தர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே இம்முடிவு எடுக்கப்பட்டதாக ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

கடந்த 33 ஆண்டு காலமாகத்தொடர்ச்சியானஆட்சி நடத்திய பிரதமர் குவாலி லியோலோ அமாற்ரோவின் ஆட்சிக்காலம் ஜனாதிபதியின் இவ் அறிவிப்பைத்தொடர்ந்து கடந்த வியாழனுடன் முடிவுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## அடுத்த வாரம் பேச்சுவார்த்தை

(கின்ஷாஷா)

வடகொரியாவிற்கும் தென்கொரியாவிற்கும் இடையில் அடுத்தவாரம் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறவுள்ளது.

இரண்டு கொரியாக்களுக்கும் இடையிலான ஐந்தாண்டுத் திட்ட பேச்சுவார்த்தைகளே அடுத்தவாரம்முதல் இடம்பெறவுள்ளன. (உ-9)

# விக்கிரமாதித்தன் கதையா? கலைஞர் கிண்டல்

(சென்னை)

"ஜெயலலிதா, ராமதாஸ் ஒப்பந்தம் விக்கிரமாதித்தன் கதை போன்றுள்ளது." இவ்வாறு தி.மு.க. தலைவர் கருணாநிதி பரிகாசம் செய்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாண்டிச்சேரி நிர்வாகத்தை பா.ம.க.வும், அ.இ.அ.தி.மு.க.வும் சுழற்சி முறையில் நிர்வகிப்பது என ஜெயலலிதாவும்ராமதாஸும் ஒப்பந்தம் செய்துள்ளமை, பட்டியும், விக்கிரமாதித்தனும், காடாறு மாதம், நாடாறுமாதம் என ஆட்சி புரிந்தது போல் உள்ளது எனவும் பரிகாசம் செய்துள்ளார் கருணாநிதி. (செ)

## செய்திப் பரல்

★ ஜப்பானியப் பிரதமர் ஜெஷிரோ மோரி மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் 274-192 வாக்குகளால் தோல்வியுற்றுள்ளது.

★ பிஜியின் மகேந்திர சௌத்திரி தலைமையிலான தொழிற் கட்சியின் கூட்டம் ஒன்றை அந்நாட்டுப் பொலிஸார் கலைத்துள்ளனர்.

★ சர்வதேச நிர்ப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டு புத்தர்சிலை அழிப்பை நிறுத்த வேண்டாமென்றுஆப்கான் இஸ்லாமிய மதகுருமார் தலிபான் தலைவரைக் கேட்டுள்ளனர்.

★ செவ்வாய்க் கிரகத்தை வானத்தில் இருந்து கொண்டு ஆராய்ச்சி செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட 12மாணவர்களில் 5பேர்இந்தியர்கள். இவர்களில் 11வயதுச் சிறுவனும் அடங்குவான். (க- 09)

# தீவிரவாதிஹாசாவிற்கு 4 ஆண்டுகள் சிறைவாசம்

[சென்னை]

சென்னையில் வெடிகுண்டுகளை புதைத்து வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டிருந்த அல்உமா என்னும் முஸ்லிம் தீவிரவாத அமைப்பின்தலைவர் ஹாஷாவிற்கு 4ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

1998ம் ஆண்டு பெப்ரவரி மாதம் சென்னைப் பகுதியில் அடுத்தடுத்து இரண்டு தடவைகள் குண்டினை வெடிக்கச் செய்து 60 பேரைப் பலி கொண்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஹாஷாவிற்கே சென்னை உயர் நீதிமன்றம் இத் தண்டனையை வழங்கியுள்ளது. (ச-9)

# ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்கு

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீரில் புதனன்று இடம்பெற்ற மோதலில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

ஜம்முகாஷ்மீரின் தொஹாலி கிராமத்தில் இராணுவம் ரோந்து சென்று கொண்டிருந்தபொழுது தீவிரவாதிகள் தாக்கியதில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், இராணுவத்தினரின் பதில் தாக்குதலில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட தீவிரவாதிகள் கடந்தவாரம் நஜோலி மாவட்டத்தில் பொலிஸாரைத்தாக்கிய லக்ஷர் ஈ. தொய்பா அமைப்பினர் என்று இராணுவத்தினர் திட்டவட்டமாக கூறியுள்ளனர். (உ-7)

# புஜீம்புராவில் தொடரும் எறிகணைத் தாக்குதல்

(புஜீம்புரா)

புருண்டியின் தலைநகர் புஜீம்புராவில் ஹட்டு சிரேஷ்ட கெரில்லாக்களின் எறிகணைத் தாக்குதல்கள் தொடர்வதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எறிகணை வீச்சுக்களினால் கட்டடங்கள் பலத்த சேதத்திற்குள்ளாகி வருகிறன.

நிலைமையின் விபரீதத்தினை கட்டுப்படுத்தும் வகையில் அப்பகுதியில் அறிவிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் தொடர்கிறது.

இதே வேளை, கடந்த வாரம் ஹட்டு கெரில்லாக்களின் தாக்குதல்களில் 30 இற்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# ஜாக்பொட் பரிசு 9 கோடியே 90 இலட்சம்

(இலண்டன்)

வடகலிபோர்னியாவில் பெண் ஒருவருக்கு 9கோடியே 90 இலட்சம் டொலர் ஜாக்பொட் பரிசு கிடைத்துள்ளது.

சாங்கோ என்ற பெண்ணிற்கே இவ் அதிஷ்டம் கிட்டியுள்ளது. இதனை அறிந்ததும் அப்பெண்ணிற்கு உடனடியாகஇரத்தஅழுத்தம் 200ஐ எட்டியதாகவும் பின்னர் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதுஎனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியா மாநில சுப்பர் லாட்டரியில் மிகப் பெரிய பரிசைப் பெற்றவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

# பெண்கள் விடுதியில் தீ 30 பேர் கருகிப் பலி

(லாகூர்)

பெண்கள் பாடசாலை விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தின் போது 30 பேர் கருகிஉயிரிழந்துள்ளனர்.

இப்பரிதாப சம்பவம் நைஜீரியாவில் இடம்பெற்றுள்ளது. கடந்த செவ்வாய்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. (செ)

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து
- குறள் -

# வலம்புரி

## ஆற்றுப்படுத்தும் பேராசான்

ஆசிரியத்துவம் புனிதமானது. எல்லோராலும் மதிக்கப்படுவது. எனினும் எல்லா ஆசான்களும் மாணவர்கள் மனதில் இடம் பிடித்து விடுவதில்லை. அதற்குப் பல்வேறுபட்ட காரணங்கள் உண்டு. குறிப்பாக ஒரு ஆசிரியன் மாணவர்களின் மனநிலையை அறிந்து தனதுகருமங்களைஆற்றாவிடில் எக் காலத்திலும் மாணவர்கள் அவ் ஆசிரியனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இது அறிஞர் பெருமக்களின் பட்டறிவு.

அப்படியாயின் மாணவர்களின் மனங்களைக் கவர்ந்த ஆசான்கள் தனியே மாணவரின் மனநிலைக்கு ஏற்ப தமது செயற்பாட்டை நகர்த்தியவர்கள் மட்டுமல்ல, அதற்கு மேலாக ஒருபடி மேலே சென்று குறித்த மாணவனின் உளநிலை அவனை ஆற்றுப்படுத்தி புறநிலைத் தேவைகளை-உதவிகளை வழங்கி அவனின் உயர்ந்த வாழ்விற்கு ஏணியாக இருந்தார்கள்.

இவ்வகை ஆசான்களை மாணவ சமூகம் - கல்விச் சமூகம் ஒருபோதும் மறப்பதில்லை.

அவ்வகையில் அந்த உயரிய நிலையை அடைந்தவர்களில் பேராசான் தேவராஜா அவர்கள் குறிப்பிடத்தக்கவர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வணிகத் துறைத்தலைவரான அவரிடம், எல்லாப்பீடமாணவர்களும் சென்று ஆலோசனை பெற்றுக் கொள்ளும் தன்மை அற்புதமானது. எந்த மாணவனுக்கும் தனது நிலையை விட்டிறங்கி உதவி செய்யும் அவரின்பெருந்தன்மை இந்த மண்ணில் இன்னமும் மனுநீதி வாழ்கிறதென்பதைஉறுதிப்படுத்துகிறது. கல்வியுலகில் தனக்கென ஓர்தனியான இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ள தேவராஜா அவர்கள் மாணவர்களை ஆற்றுப் படுத்தும் பேராசானாக விளங்குவதால் மாணவர்களிடையேஏற்படக் கூடிய எத்தனையோ சிக்கல்கள்- பிரச்சினைகள் தவிர்க்கப்பட்டுள்ளன அதேவேளை மாணவசமூகத்துடன் மட்டும் தனது சேவையை வரையறுத்துக் கொள்ளாது தான்சார்ந்த இன, மத, மொழிக்கும் தனது சேவையை வழங்கி வரும் அவரின் மேலான பண்பு என்றும் போற்றுதற்குரியது. அவ்வகையில் பொன் விழாக் காணும் அவரின் பணி மேலும் சிறப்புறட்டும்.

# புதிய கல்வி சீர் திருத்தம்

# மாணவர் கல்வியை பாழடிக்கிறது

### அ. இ. தமிழர் ஆசிரியர் சங்க செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புதியகல்விச் சீர்திருத்தமானது மாணவர் கல்வியை மழுங்கடிப்பதாக அமைந்துள்ளது. இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் அகில இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நமகாசிவம்.

தமிழர் ஆசிரியர் சங்க யாழ். கிளையின் விஷேட பொதுக் கூட்டம் யாழ் மாவட்ட நிர்வாகி வ.கணேசமூர்த்தி தலைமையில்நேற்று யாழ் நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போதே அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மட்டத்தில் நடைபெற்றுவரும் கணிப்பீட்டினால் மாணவர் பெரிதும் பாதிக்கப் படுகிறார்கள்; கணிப்பீட்டின் போது 81 புள்ளிகளைப் பெற்றவர்களே தேர்ச்சி பெற்றுள்ளனர் எனக் குறிப்பிடப்படுகிறது. 80 புள்ளியைப் பெற்றவர்கள் தேர்ச்சியை நெருங்கியுள்ளார்கள் என்றே குறிப்பிடப் படுகிறது.

இதனால் 80 இலும்சற்றுக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

அத்துடன் இக் கணிப்பீட்டு முறையானது பெற்றோரையும் பாதிக்கிறது. மாணவர்கள் பலர் பாடசாலை கணிப்பீட்டிற்கான செயற்பாடுகள் அனைத்தையும் பெற்றோரைக் கொண்டே செய்கிறார்கள். இதனால் அது பெற்றோரின் திறனுக்கான ஓர் கணிப்பீடாகவே காணப்படுகிறது. அத்துடன் மாணவர் திறன்களையும் மழுங்கடிக்கச் செய்கிறது மேலும் பெற்றோருக்கு பண, நேர விரயத்தையும் ஏற்படுத்துகிறது என்றார்.


[க-02-10]

## தவக்காலச் சிந்தனை - 11



ஒவ்வொரு மனிதனையும் இணைக்கும் பாசக் கயிறாக விளங்குவது அன்பு. நம் இதயத்திலிருந்து உதயமாகின்ற அன்பு சில நேரங்களில் பகைமை என்னும் தீய சக்தியினால் செயலிழந்து உறவினை பிரிக்கும் முள்வேலியாக மாறி விடுகின்றது. புனித பெர்நார்து கூறுவார்: "இறைவனை அன்பு செய்ய எல்லை என்று இல்லை." ஆனால் மனிதர்களின் அன்புக்கு ஓர் எல்லை உண்டு. எப்போதும், எல்லோருக்கும் கனிவாய் அன்பு செலுத்துவது என்பது இயலாத ஒன்று. பகைவர்களின் தவறினை மறந்து அவர்களிடம் அன்பு செலுத்துவது என்பது மிகவும கடினமானது. பாவத்தால் இறைவனுக்கு நாம் பகைவர்களாயிருந்த போதும் கூட நமக்காக தன்னுயிரை சிலுவையிலே தந்து அன்பு செய்தார். அப்படியெனில் பிறர் நமக்குத் தரும் சிறு சிறு துன்பங்கலள, தொல்லைகளை இயேசுவுக்காக தாங்கிக் கொண்டு அவர்களை மன்னித்து அன்புடன் வாழ வேண்டும் இயேசுவின் இதயத்தில் வாழும் நம் பகைவன் அன்பு செய்யப்பட வேண்டியவன். காரணம் அவனுக்காக/அவளுக்காக இறைவன் தன்னுயிரையே தந்திருக்கின்றார்.

காவலன்



பேராசான்

# தேவராஜாவின்

# பொன்விழாச் சிறப்புக் கவிதை

## நலமாண்டு பல்லாண்டு வாழ்க நீடு!

(1)

கந்தையரும் அன்னமுமாய் (க்) கசிந்து பக்தி
காத்திட்டுத் தாவடியின்
தந்தபெரும் வேண்டுதலால் தவத்தில் வினாய சர்க்குத்
தாதேவ வந்தோன்
விந்தையல; ராஜாவென் றுரைத்தால் அஃது
அவர்வாழ்வே விளக்க மாகும்.
விளைவுகளும் தகமைகளும் வெளிச்ச
சிந்தைநிறை சிறப்போடும் சீரி மன்றோ!
னோடும்
செந்தமிழ்க்கு நலம்சேர்த்து வாழ்க நீடு!

(2)

கற்பித்தற் கூடங்கள்
கழகம் சங்கம்
கண்ணியமாய் (ப்) பணியாற்றி(க்) கருத்து
பற்றுற்று (ச்) செயலாக்க ஒன்றி(ப்)
ஊக்கம் பெற்று(ப்)
பாங்குடைய
சொற்பற்றும் முகாமைத்துவப் பரப்பைப் பற்றிச்
எழுத்தாக்கம் தந்த தேவா;
தொடர்பணிகள்
நற்பற்றால் துலங்கிடவும்; மேன்மை பெற்று
நம்மண்ணை நேசித் தென்றும்
நலமாண்டு பல்லாண்டு வாழ்ச நீடு!

(3)

எல்லோரும் 'தேவா' என்[று] அழைக்கும் அன்பன்
ஏற்றமுறு பண்பாலே ஈர்க்கும் நண்பன்
வல்லோனாய் பல்கலையில் வர்த்த கத்தை
வளமாக்கும் துறைதன்னை ஆளும் மேலோன்
நல்லோர்கள் நடைஉடையில் நாட்டம் மிக்கோன்;
நற்கருமம் ஆற்றுவதில் நலம்சேர் வல்லோன்
பல்லோரும் போற்றுகின்ற பாங்கு பெற்றோன்
பத்தைந்து ஆண்டு பல நீடு வாழ்க!

நயினக்கவிஞர்

நா. க. சண்முகநாதபிள்ளை

## பாடசாலை திருத்தம்

(மல்லாகம்)

மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயத்தில் சிறுமண்டபம் அமைக்கப்பட்டதுடன் சுவர்களின் வெடிப்புக்கள் நிரப்பப்பட்டு திருத்தவேலைகளும்மேற் கொள்ளப்பட்டுள்ளன

சுன்னாகம் சபாபதிப் பிள்ளை வீதியில் மேற்படி பாடசாலை தற்காலிகமாக இயங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-122)

## சிறுவன் காயம்

உரும்பிராய் பகுதியை சேர்ந்த சி. நனஸ் (வயது 16) வீட்டுவளவிற்தா நாயின் மேல் விழுந்ததினால் கை முறிந்த நிலையில் யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன் தினம் இடம் பெற்றுள்ளது.

மழைகாலத்தில் இவ் வீதி போக்குவரத்துச் செய்யமுடியாதளவிற்கு சேறும் சகதியுமாய்க் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

## இன்றும் நாளையும் முக்கிய சந்திப்பு

யாழ்ப்பாணம் வந்துள்ள இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் மற்றும் முக்கியஸ்தருடனான சந்திப்பு இன்று முற்பகல் 10.00 முதல் பிற்பகல் 1 00 மணிவரை கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது

வடமராட்சி மற்றும் தீவக வலயத்தினர் இச் சந்திப்பில் கலந்து கொள்ளலாமென்றும். வலிகாமம் மற்றும் தென்மராட்சிப் பிரிவினர் நாளை முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 1 00 மணிவரை மேற்படி பாடசாலையில் சந்திக்க முடியும் என்றும் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

மேற்படி குழுவினர் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம விஜயம் செய்தது ஏற் னவே தெரிந்ததே. (க-10 2)

## முடிவுதிகதி நீடிப்பு

தட்டச்சு சுருக்கெழுத்தாளர் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குரிய விண்ணப்ப முடிவுத் திகதிநீடிக்கப்பட்டுள்ளதால்இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் எதிர் வரும் 13ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு ஈ.பி டி.பி யாழ்தலமைச்செயலகம் அறிவித்துள்ளது. (இ)

## கலந்துரையாடல்

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் எழுச்சி நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் இன்று பி. ப 4. 00 மணிக்கு யாழ் நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது:

இக் கலந்துரையாடலுக்கு ஊடகவியளாலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு த. பஞ்சலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்

(க-02-10)

## மெய்வல்லுநர் போட்டி

ஏழாலை தெற்கு அ மி: த. க. பாடசலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பி. ப. 1. 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் மு. செல்வஸ்தான் தலைமையில் நடைபெறவுள்ள இப் போட்டிக்கு. உடுவில் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் அ தற்பரானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(செ-49)

நல்லூர் ... நூலகம் ... யாழ்ப்பாணம்

எண்ணம்போல வண்ண
நகைகளை மங்கையர்
மனங்குளிர செய்து
பெற்றுக்கொள்ள
நியூ நகுலா
ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[கி-1575]

# இராணுவரீதியில் உதவிசெய்யுமாறு இந்தியாவிடம் நாம் கேட்கவில்லை!

## லக்ஷ்மன் கதிர்காமர்பேட்டி

(கொழும்பு)

இராணுவ ரீதியாக எமக்கு உதவுமாறு இந்தியாவிடம் நாம் எப்போதும் கோரிய தில்லையென்று வெளிவிவகார 'அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் ''பிஸ்னஸ்லைன்'' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில்அவர்மேலும் தெரிவிக்கையில், இந்தியாவுக்கும் எமக்குமிடையிலான உறவு மிகவும் சிறப்பான நிலையில் உள்ளது.

இந்தியா இலங்கையின்ஆட்புல ஒருமைப்பாட்டை ஆதரிக்கின்றது ஆனால் மாற்று பிரிவினையைஎதிர்க்கின்ற போதும்தமிழ்மக்களின் அபிலாசைகள் மற்றும் சகல இனமக்களினதும் அபிலாசைகள்மதிக்கப்பட வேண்டுமென்று கருதுகின்றதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-5)

அழகிற்கு அழகூட்டும்
தங்க நகைகளை
உடனுக்குடன் செய்து
தருபவர்கள்
நியூ
ராதிகாஸ்
நகைமாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1576)

# மின்சாரசபைத் தலைவர் இராஜினாமா?

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபையின் தலைவர் அர்ஜுனா தரணியகல தனது பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அவர் தனக்கு உடல்நிலை சரியில்லாது இருப்பதாலும் தற்போது குடும்பத்தைக் கவனிக்கவேண்டிய தேவை உள்ளதாலுமே தான் பதவியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதிக்கெழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மின்சார சபையில் ஊழல்கள் மலிந்து விட்டதாக அண்மையில் ஜனாதிபதி கருத்து வெளியிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-4)

# முட்டாஸ் கடைசந்தியில் கார் - பஸ்விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முட்டாஸ் கடைச்சந்தியில் நேற்றுபஸ் வண்டியும் மோட்டார்காரும் விபத்துக்குள்ளாகின.

நேற்றுப்பிற்பகல்4.30மணி அளவில் இடம்பெற்றஇந்த விபத்துச் சம்பவத்தில் மானிப்பாய்வீதியால் யாழ் நகர்நோக்கி வந்தபஸ்வண்டியும் நயினாதீவுநாகபூசணி அம்மன் ஆலயத்திற்குச் சென்று விட்டு திரும்பிவந்து கொண்டிருந்த காரும்நேருக்குநேர் மோதின இதனால் காரின் முன்பக்கம் பலத்த சேதத்திற்கு உள்ளானது பஸ் வண்டியின் ஒருபக்கமும் சேதமடைந்தது.

இச்சம்பவத்தில் பயணிகள் தெய்வாதினமாக காயங்கள் ஏதுவுமின்றி தப்பிக்கொண்டனர்.

இதுதொடர்பாக ஸ்தலத்திற்குவிரைந்த பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர்.

(ம)

பொன்விழா நாயகனை

## வாழ்த்தி மகிழ்கின்றோம்



உயர்திரு க.தேவராஜா

(வணிகத்துறைத் தலைவர் யாழ்.பல்கலைக்கழகம்)

கற்கவந்தவேளை தன்னில்-தாம்
கண்டோம்ஓர் மானுடச் செம்மலை
சாந்தமே சரீரமாய் சாற்றிடும் வேந்தராய்
மாந்தர் மதித்திடும் மணிமொழி செல்வனாய்
மானிலம்போற்றிடும் எங்கள் பெருமானார்
நிந்தனுக்குப் பொன்விழா-எங்களுக்கு
மகிழ்ச்சிப் பெருவிழா

வணிகத்தின் தலைவனே
வார்த்தைக்குள் அடங்காப் பெருநிதியே
பிரதிபலன் எதிர்பாரா பெருந்தகையே
சிறியோர் எச்சிறுமை பொறுக்கும் குணநிதியே
ஏற்றமும் பணிவும் ஒருங்குகண்டோம்-உம்வடிவில்
மானுடமகத்துவம் கண்டுநின்றோம்
உமைவாழ்த்த எமக்கில்லைவயது எனினும்
அன்பினால் வாழ்த்தி நின்றோம்

வாழ்க நிரந்தரம்

மாணவர்கள்
முகாமைத்துவமாணவர்மன்றம்
யாழ்.பல்கலைக்கழகம்

(2612)

**18 வருடங்கள்..-**

வருகிறார்கள்:

இந்த நாட்டில் வாழுகின்ற மக்கள் அனைவரும் சமாதானமாக, சம உரிமையுடன் வாழ்வதையே அரசு தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. விமானப்படையினர் நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க போரிட்டு வருகின்றனர் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ் வைபவத்தில் இந்திய விமானப்படையினரின் சாகசங்களும் இடம் பெற்றன.

(வ)

**வருமானம்..**

லாபச்சீட்டிழுப்பினைத் தனியாரும் நடாத்த அனுமதி வழங்கப்படவுள்ளது.

1997ம் ஆண்டு பௌத்த மதகுருமாரின் ஆட்சேபனை காரணமாக சூதாட்ட நிலையங்களுக்கான அனுமதி தடை செய்யப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-05)

**தற்காலிக...**

கள் மேற்கொண்ட கறுப்புப் பட்டிப்போராட்டத்திற்குபழி வாங்கும் நடவடிக்கையே இதுவென பரவலாகப் பேசப்படுகிறது.

இதேவேளை சுகாதார வைத்திய அதிகாரிக்குக் கீழ் இயங்க வேண்டிய பல பிரிவுகள் சின்னாபின்னமாக்கப்பட்டு வெவ்வேறு இடங்களில் இயங்க வைப்பது மரத்திலிருந்து கொண்டு அடிமரத்தைத் தறித்தவனின் அற்புதமான சிந்தை போலிருப்பதாக வைத்திய வட்டாரங்கள் ஏளனம் செய்துள்ளன.

இது இவ்வாறிருக்க சாதாரண ஊழியர்கள் அதிலும் போர்ச்சூழலில் இம்மண்ணிலிருந்து சேவையாற்றிய ஊழியர்கள் மாநகர சபையின் ஆணையிடும் பகுதியால் பழிவாங்கப்பட்டு செய்த கடமைக்கே சம்பளம் வழங்கப்படாமை குறித்து தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர்கவலைதெரிவித்துள்ளார்.

மேற்படி செய்தி மாலை வேளையில் கிடைத்தமையால் சுகாதார வைத்திய அதிகாரியுடன் இச்செய்தி அச்சாகும்வரை தொடர்பு கொள்ள முடியவில்லை.

(ந)

# பீரிஸ்-தூதுவர்கள் அவசர சந்திப்பு

(கொழும்பு)

பிரதி நிதிஅமைச்சரும்,அரசமைப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் பிரிட்டிஸ் உயர் ஸ்தானிகர்லிண்டாடபீல்டையும், இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ண காந்தியையும் அவசரமாக சந்தித்துப் பேசியுள்ளார்.

நேற்று திடீரென இடம்பெற்ற இச்சந்திப்பின் போது ஏழாவது வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை சமாளிப்பது தொடர்பாக ஆராய்ந்ததாக இந்திய தூதரகவட்டாரங்கள் தெரிவித்தன.

(வ)

**புரிந்துணர்வில்**

பிக்கப் படுமெனவும் கூறியுள்ளார்.

இவ் வேளையில்விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன்பாலசிங்கம் செய்திஊடகங்கள் வெளியிட்டுள்ள பேச்சுவார்த்தை தொடர்பான தகவல்களையும் ஜனாதிபதிசந்திரிக்காவின் கூற்றையும்மறுத்துள்ளார்.

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக நோர்வேஅரசு தயாரித்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் எழுந்துள்ளமுரண்பாடுகள் இன்னமும்களையப் படவில்லை இதனால்ஒப்பந்தம்தொடர்பான இணக்கப் பாடுஎதுவும் ஏற்படவில்லை.

இந்நிலையில் பேச்சுவார்த்தைக்கான திகதி எவ்வாறு நிர்ணயிக்கப்பட முடியும்.

போர்நிறுத்தம் வன்னிக்கான பொருளாதாரத்தடை போர்நிறுத்தக் கண்காணிப்பு என்பனவற்றில் எந்த விதமான இணக்கப்பாட்டிற்கும் வராதநிலையில் பேச்சுவார்த்தை எப்படிசாத்தியமாகும்? என்றும்அன்ரன் பாலசிங்கம் கேள்வி எழுப்பி உள்ளார்.

(வ)

**புலிகளின்**

தத்தில் தனது கடந்தகால அனுபவங்கள் எனத் தெரிவிதது உரையாற்றிய சரத் முனசிங்க மேலும் பேசுகையில்

இந்திய அதிகாரியின் கூற்று முற்றிலும் உண்மையானதாகவே அப்போது அமைந்திருந்தது. ஏனெனில் நானே விடுதலைப் புலிகளின் பிரதிநிதியான அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி என்பவரை கல்கமுவவிலுள்ள காணிஞ் சென்ற முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிறேமதாசாவின் வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். அங்கு தான் புலிகளின் பிரதிநிதிக்கும் ஜனாதிபதி பிறேமதாசாவுக்குமிடையே இரகசியப் பேச்சுக்கள் இடம் பெற்றதென்று தெரிவித்தார்.

(இ)

**சத்தியாக்கிரக...**

னியாவில் இருந்து மலையகத்துக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது.

புளொட் அமைப்பினர் இன்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில் நேரடியாக கலந்துகொள்வர்.

இன்றைய உண்ணாவிரதப் போரில் தமிழர்விடுதலைக் கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ் ரெலோ தலைவர்களும் கலந்து கொள்கின்றனர். [வ]

இணுவையூரில் இன்று பொன்விழாக் காணும் உயர்திரு. க. தேவராஜா
(வணிகத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்
THIGAL கல்வி நிறுவனம்
இணுவில்
வெளிவாரிப்பட்டப்படிப்பு மாணவர்கள், விரிவுரையாளர்கள்,
இயக்குனர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
[கி-1585]

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.